Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.2.00 United Kingdom: £1.00

பட்டம்மாள்

சங்கீத உலகில்
ஒரு தனித்துவம்




SEPTEMBER 2009

# நாழிகை

NAZHIKAI London

International Tamil Newsmagazine



72 மணித்தியாலங்களின் முன்னர்

## கே. பி. சிறப்பு செவ்வி:

## 'நிரந்தர அரசியல் தீர்வு எமது பாரிய பொறுப்பு'


Introducing
Made using milk powder imported from New Zealand
Niru BRAND®
Lemon Puff
WITH REAL LEMON CREAM
சுவைத்துப் பாருங்கள் உண்மையான லெமன்கிறீம் சுவையை.
SGS
SGS
Produced in our ISO 22000/HACCP certified factory

## வடமேற்கு லண்டன் பகுதியில் மிகுந்த பிரபல்யத்துடன், தனது வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்தர சேவையையும் ஆலோசனையையும் வழங்கிவரும் சட்ட நிறுவனம்

Immigration - குடிவரவு விவகாரங்கள்
European Union Law - ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள்
Entry Clearance applications and appeals - வீசா விண்ணப்பங்கள், மேன்முறையீடுகள்
Marriage Applications (Certificate of Approval) - விவாக விண்ணப்பங்கள்
Human Rights Claims and Appeals - மனித உரிமை விண்ணப்பமும் மேன்முறையீடும்
Point Based System - Applications and Appeals

Tier 1 (Highly skilled Workers, Entrepreneurs, Investors)
Tier 1 (Post Study Work)
Tier 2 (Sponsored skilled workers) (formerly 'work permit')
Tier 4 (Students)
Tier 5 (Temporary workers)

Asylum Claims and Appeals - அகதி தஞ்ச விண்ணப்பமும் மேன்முறையீடும்
British Citizenship and Nationality - பிரிட்டிஷ் பிரஜாவுரிமை
Detention and Deportation - தடுத்துவைத்தலும் நாடுகடத்தலும்
Judicial Review

**Personal Injury (On No Win No Fee Basis)** - விபத்து காயங்கள்
(வென்றால் மட்டுமே கட்டணம்)

- **Road Traffic Accident**
- **Slip and Trip**
- **Work Related Accidents**
- **Clinical Negligence**

Community Legal Service

Criminal Defence Service

**Crime (Public Funding Available)** - குற்ற செயல்கள்
**24 Hour Police Station Representation**
**Representation at Magistrates Court**
**Representation at Crown Court**

**Property** - உடமைகள்
**Residential Property**
**Commercial Property**
**Landlord and Tenant Matters**

**Family Matter** - குடும்ப விவகாரங்கள்
**Divorce Matters**
**Ancillary relief**
**Other Family matters**

# MALIK & MALIK SOLICITORS

**Commissioners for Oaths**

**232 High Road, Willesdon, London NW10 2NX**

**Tel: 020-8830 3050 Fax: 020-8830 3051 Mobile: 24 Hour Police Station Service 07710 989 203**

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

DEEPAM

10
ஆவது
ஆண்டில்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்

**DEEPAM TV**
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK

Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv

# நாழிகை | உள்ளடக்கம்


15 | சில கேள்விகள்...
இரா. சம்பந்தன்
சுயநிர்ணய உரிமையுடன் அரசியல் தீர்வு

16 | இலங்கை
அரசின் முன்னெச்சரிக்கை

22 | உலக விவகாரம் - இந்தியா
பாகிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்க தலையீடு?

26 | உலக விவகாரம் - மியன்மார்
இராணுவ ஆட்சி விடுபடுமா?

26 | உலக விவகாரம் - சீனா
முஸ்லிம் பிரச்னையை சமாளிக்கும் சாதுரியம்




இலங்கையில் சர்வதேச சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் 'வீடியோ' பதிவு




18 | அட்டை செய்தி
'நிரந்தர அரசியல் தீர்வு எமது பாரிய பொறுப்பு'
செல்வராசா பத்மநாதன் சிறப்பு செவ்வி





35 | கலை
'காஞ்சிபுரம் பட்டு'


38 | கலை
லண்டனில் அரங்கேற்ற 'சீசன்'

40 | சிறுகதை
வாசல்தேடி யுத்தம்





44 | சினிமா


Rathy Jewellers
&
Silk House
Opening Hours
Monday - Saturday
10.30am - 6.30pm
Sunday
12noon - 6.30 pm
28 Ealing Road, Wembley, Middlesex HA0 4TL
Tel : 020 8903 3063 Fax : 020 8903 9711



# BHAVAN & VANI FINE ARTS

PRESENT

Karnatic Vocal Workshop & Karnatic Vocal By

**Dr.Premeela Gurumurthy**



## Karnatic Vocal Workshop

**Venue:** Bhavan Centre, 4a Castletown Road, West Kensignton, London W14 9HE

**Date and Time:** Monday 14th September to Friday 18th September 2009 , 6.00pm - 9.00pm

**Fee: £50 for whole workshop**

## Karnatic Vocal Concert

**Accompanying Artists: Violin – Balu Raghuraman, Mridangam – M.Balachander**


**Venue:** Bhavan Centre, 4a Castletown Road, West Kensignton, London W14 9HE

**Date and Time:** Sunday 20 September 2009 at 6.00 pm ( Doors open 5.30pm )

**Tickets: £15, £10**

For ticket booking & information please contact: 02073860924

Book your tickets via online **www.vanifinearts.net**



**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: IV, No: 7 & 8
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
**Anual Subscription** (12 issues): **UK** £20.00 **Europe** £25.00 **India & Sri Lanka** £10.00 **All Other Countries** £30.00
Payable to **Pannews (IBAN: GB70 LOYD 3096 6602 2983 78)**

# அரசியல்வாதிகள்

இலங்கையில், 1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தன முன்னரெப்போதுமே ஏற்பட்டிராத மிகப்பெரு மளவு பெரும்பான்மையுடன் ஆட்சிக்குவந்தார். சுதந்திர காலத்திலிருந்தே இலங்கை அரசியலில் மிக முக்கிய பங்கை வகித்த அவர், நாட்டின் இனப் பிரச்னையையும் மிகவே தெரிந்தவர்; அத்துடன், அந்த இனப் பிரச்னைக்கு சில விதங் களில் காரணமாகவிருந்த அரசியல் தலைவர்களில் அவருங் கூட ஒருவர். 1956 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்து, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சி அமைத்த போது, தமிழர் பிரச்னைக்கு ஓர் இடைக்கால தீர்வாக பிரத மர் பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசு கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையே 'பண்டா - செல்வா ஒப் பந்தம்' கைச்சாத்தானது. அந்த ஒப்பந்தத்தின்மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெரும்பகுதியை பண்டாரநாயக்கா தமிழர்களுக்கு விற்றுவிட்டாரென்று கூறி, கண்டி, தலதா மாளிகைக்கு பாதை யாத்திரை ஒன்றை ஆரம்பித்து, சிங்கள மக்களை அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்த வர் ஜே. ஆர் . ஜயவர்த்தன. இதன் விளைவாக, பண்டாரநா யக்கா அந்த ஒப்பந்தத்தைக் கைவிட்டார்.

இப்படி, அரசியல் லாபங்களுக்காக தோற்றுவிக்கப் பட்ட, மேற்கொள்ளப்பட்ட இனப் பிரச்னை நடவடிக்கை களையும், அவற்றின் விளைவாக அப் பிரச்னை அடைந் துள்ள நிலையையும் நன்கே தெரிந்த ஜயவர்த்தன, ஆட்சியை அமைப்பதில் தமிழர்க ளின் ஆதரவைப் பெறுவதற்காகவோ என்னவோ, தமிழர் பிரச்னைக்கு சர்வ கட்சி மாநாடுமூலம் தீர்வு காணப்படும் என்று கட்சியின் தேர்தல் விஞ்ஞாப னத்தில் அறிவித்தார். ஆனால், தேர்தலில் மற்றைய கட்சிகள் மிகப்பெரும் தோல்வியைச் சந்தித்து, பாராளுமன்ற பிரதிநி தித்துவத்தை இழந்ததில், அப்படி ஒரு சர்வகட்சி மாநாடு அவரால் கூட்டப்பட வில்லை.

எனினும், அப்போதிருந்த அரசியல் தலைவர்களில் மூத்த வராகவும் முக்கியமானவராகவும் சிங்கள மக்களின் பெரும ளவு ஆதரவைப் பெற்றவராகவுமிருந்த அவர், கட்சியில் அவ ரின் சொல்லை மீறத் துணியாத விசுவாசத்தைப் பெற்றவரா கவும் இருந்தார். அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள தும் தேதியிடப்படாத இராஜினாமா கடிதத்தை, அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்தவேளையிலேயே பெற்றுவைத்தி ருந்த அரசியல் தலைவர் அவர்.

தனக்கிருந்த பெரும்பான்மை பலத்தில் இலங்கையின் அரசியலமைப்பை மாற்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிக்கு வந்தவர். அப்போது, தமி ழர்களிலும் ஒன்றுபட்ட அமைப்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் மக்களாணை பெற்ற ஒரு கட்சி யாக பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகியது.

'ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவது தவிர (இதுவும் இப்போது முடிகிறது) வேறு எதைவேண்டுமானாலும் செய்வேன்' என்று அவரே கூறும் விதத்தில், சர்வ வல்லமை மிக்கவராகவே விளங்கினார் ஜய வர்த்தன. ஆனால், அவருடைய அந்த வல்லமையில், அந்த நாட்டின் இனப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக்காணும் 'மனம்' அவருக்கு இருக்கவில்லை.

விளைவு; இனபேதமின்றி, இரத்தக் களரிகளையும், பாரிய மனித அவலங்களையும் நாடு சந்தித்தது. உலகின் மிகப்பெரும் சக்திவாய்ந்ததும் மூர்க்கமானதுமான தீவிரவாத இயக்கமாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் உருவானது.

இப்பொழுது, அரசியலில் வெகுகால ஈடுபாடு இருந்தா லும், ஜயவர்த்தனவைப்போல அறியப்பட்டவர் அல்லர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சந்திரிகா குமாரதுங்கவின் ஜனாதிபதி காலத்தில் அவரால் பிரதமர் பதவியில் அமர்த்தப் பட்டாலும், விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா மேற் கொண்ட நடவடிக்கைகளுடனும் மஹிந்த ராஜபக்ஷ அறி யப்படவில்லை. ஆனால், இன்று அந்த விடுதலைப் புலி களை வெற்றிகொண்டதில் ஒரு பெரும் முக்கியத்துவத்தை சர்வதேச ரீதியில்பெற்று, உள்நாட்டிலும் பெரும்பான்மை மக்களிடையே பெரும் செல்வாக்கை அவர் பெறுகிறார்.

ஆக, ஜனநாயக ரீதியில் ஜே. ஆர். ஜயவர்த்தன மிகப் பெரும் வெற்றி ஒன்றைப் பெற்றார். அதேபோல, இராணுவ ரீதியில் மஹிந்த ராஜபக்ஷ பெருவெற்றி பெற்றார். ஆனா லும், இந்த இரு வெற்றிகளும் இதுவரை வெளிப்படுத்தும் கசப்பான உண்மை, எந்த வெற்றியிலும் அரசியல் வெற்றி யையே சிந்திக்கும் அரசியல்வாதிகள்தான் இவர்கள் என் பதே. ஜே. ஆர். ஜயவர்த்தன தமிழர் பிரச்னையை தீர்க்காத தில் சிங்கள மக்களேனும் பிரச்னையின்றி இருந்தார்களா? நாடு சுபீட்சத்தில் நடைபோட்டதா? இப்போது, பிரச் னைக்கு உரிய தீர்வுகாணாத ராஜபக்ஷவின் வெற்றியில் மக்க ளுக்கும் நாட்டுக்கும் இவை கிட்டப்போகின்றனவா? அரசி யல்வாதிகளுக்கு தேவை பிரச்னைகள்.


விடுதலைப் புலிகளை அரசு வெற்றிகொண்டது. ஆனால், புலிகளின் தோல்விக்கு காரணம் என்ன? அரசின் போக்கும் புலிகளின் அந்தத் தோல்வியை நோக்கியதாகவே தெரிகிறது.

■

# உலகம்

அமெரிக்கா

## முடிவுறும் கெனடி சகாப்தம்



அமெரிக்காவின் அதி கீர்த்திமிக்க அரசியல் குடும்பத்தின் கடைசி வாரிசான செனற்றர் எட்வர்ட் கெனடியின் மறைவுடன் அமெரிக்க அரசியலில் ஒரு சகாப்தம் முடிவுற்றிருக்கிறது.

1962இல் ஜோன் கெனடி ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்து அவரது இடத்துக்கு, நாட்டின் அதி இளம் செனற்றராக நியமனம்பெற்ற எட்வர்ட் கெனடி, அமெரிக்க காங்கிரசில் மிக நீண்டகாலம் அப்பதவியை வகித்தவர்களில் மூன்றாமவராக, சுமார் அரை நூற்றாண்டு காலம் பதவியிலிருந்தார். ஆண்கள், பெண்கள், குழந்தைகளென நாட்டின் பிரஜைகள் ஒவ்வொருவரினது வாழ்வுடனும் தொடர்புடைய மிக ஏராளமான சட்டவாக்கங்களுடன் தொடர்புற்றிருந்த அமெரிக்க அரசியல்வாதி இவரே.

குறிப்பாக, தகவல் சுதந்திரம், கல்வி, ஆரோக்கியம் தொடர்பான சட்ட உரிமைகளை வலுவாக நிலைநாட்டுவதில் வெகுவாக உழைத்திருக்கிறார்.

மூத்த சகோதரர் ஜோன் கெனடி ஜனாதிபதியாக பதவியேற்ற ஓராண்டிலும், மற்றைய சகோதரர் றொபர்ட் கெனடி ஜனாதிபதியாக வாலிருந்தவேளையிலும் மிக இளம் வயதினராகவே படுகொலைசெய்யப்பட்டபோது, எட்வர்ட் கெனடி அப்பதவியை அடைவார் என்றே நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரது 46ஆண்டுகால அரசியல் வாழ்வில் வெள்ளை மாளிகையில் அவரால் வாசம்செய்ய முடியாமலேயேபோயிற்று.


அவரது வாழ்வில் ஒரு கறையாக, 1969இல் ஏற்பட்ட கார் விபத்து ஒன்றில், காரில் பயணம்செய்த பெண் ஒருவர் மரணமான சம்பவம், வெள்ளை மாளிகையை நோக்கிய அவரின் பயணத்தில் பெரும் தடையாக அமைந்தது.

எனினும், அவர் ஜனாதிபதியாகி, அந்த ஜனாதிபதி பதவிக்காலத்துடன் அவரது பணி முடிந்துவிடாமல், இவ்வளவு நீண்டகாலம் அவரது அரசியல் பணி தொடர்ந்ததை அமெரிக்க மக்கள் ஒரு பேறாகவே கருதுகிறார்கள்.

தீவிர முற்போக்கு சிந்தை கொண்டவரான எட்வர்ட் கெனடி, ஈராக் யுத்தத்தில் ஜோர்ஜ் புஷ்ஷுடன் கடுமையாக முரண்பட்டார். அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக இளம் இலினொய்ஸ் மாநில செனெற்றர் பராக் ஒபாமாவுக்கு தன்னுடைய அங்கீகாரத்தை அளித்த அநுபவ முதிர்ச்சிபெற்ற மசாச்சுசெற்ஸ் மாநில செனற்றர் எட்வர்ட் கெனடி, பராக் ஒபாமாவின் வெற்றியில் பெரிதும் நிறைவுகண்டார்.

"நரைதிரை வரை வாழவேண்டும்" *(live to comb gray hair)*என்ற ஐரிஷ் கவிஞன் யேற்ஸ் வாக்கியத்தை மேற்கோள் காட்டியிருந்த எட்வர்ட் கெனடி, குடும்பத்தில் மற்றையவர்களைவிட இருமடங்கு காலத்துக்குமேல் வாழ்ந்து, ஓகஸ்ற் 25ஆம் தேதி அவரது 77ஆவது வயதில் காலமானார்.

மூத்த சகோதரர் ஜோசப் கெனடி இரண்டாம் உலக யுத்தத்தில் யுத்த விமானியாக பணியிலிருக்கையில் மரணமானார்.



பாகிஸ்தான்

## தலிபான் தலைவர்

பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் புதிய தலைவராக, அதன் முன்னைய தலைவர் பைதுல்லா மஹ்சூட்டின் மிக நெருங்கிய சகாவான ஹகிமுல்லா மஹ்சூட் அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

புதிய தலைவரை அறிவித்திருந்தாலும் பைதுல்லா மஹ்சூட் இன்னமும் உயிருடனேயே இருப்பதாகவும், கடுமையான சுகவீனம் காரணமாக அவர் மறைந்து வாழ்வதாகவும் தலிபான் தொடர்ந்தும் வற்புறுத்திவருகிறது.

ஓகஸ்ற் முற்பகுதியில் அமெரிக்க படைகளின் அதிகாலைத் தாக்குதல் ஒன்றில் பைதுல்லா மஹ்சூட் கொல்லப்பட்டதாக பாகிஸ்தானிய அமெரிக்க அதிகாரிகள் உறுதியாக நம்புகையிலேயே தலிபான்கள் இப்படி தெரிவிக்கின்றனர்.

தான் உயிருடன் இருக்கையிலேயே அடுத்த தலிபான் தலைவர் தலிபான் கவுன்சிலால் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற தனது விருப்பை மஹ்சூட் தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

பைதுல்லா மஹ்சூட்டைப் போலவே அவரது இளம் தளபதியொருவரான ஹகிமுல்லா மஹ்சூட்டும் ஈவிரக்கமற்ற ஒருவர் என்றே கூறப்படுகிறது.

ஆனால், இந்த நியமனம், பைதுல்லா மஹ்சூட்டின் மறைவையே உறுதிப்படுத்துவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

மலேசியா

## பெண்ணுக்கு பிரம்படி



மலேசியாவில் மது அருந்திய பெண்ணுக்கு விதிக்கப்படவிருந்த பகிரங்க பிரம்படி தண்டனை ரமழானை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் இஸ்லாமிய சட்டத்தின்கீழ் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்த கார்த்திகா சுகர்ணோவுக்கு ஆறு பிரம்படிகள் வழங்கப்படவிருந்தன. மலேசியாவில் பெண் ஒருவருக்கு இத்தகைய தண்டனை வழங்கப்படுவது இதுவே முதல்தடவை. எனினும், இந்த தீர்ப்பு குறித்து அவர் மேன்முறையீடு எதனையும் செய்யவில்லை.

மலேசியாவின் பெரும்பான்மை மலே இனத்தவர்கள் இந்த இஸ்லாமிய சட்டத்துக்கு உள்பட்டவர்கள்.

தாதியாக பணிபுரியும் இரண்டு பிள்ளைகளின் தாயான 32 வயதுடைய கார்த்திகா, தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக அழைத்துச்செல்லப்பட்டபோது, கடைசி வேளையில், ரமழான் நோன்புகாலம் முடியும்வரை அவரது தண்டனை ஒத்திவைக்கப்பட்டது.

பிரம்படி வழங்கும் தண்டனையை நிறுத்தும்படி சர்வதேச மன்னிப்புச் சபை மலேசிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளபோது, தண்டனை என்பதனைவிட, மற்றையவர்களுக்கான ஒரு போதனையே இது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சட்டத்தை மதிப்பதால், தண்டனையை அமைதியாக ஏற்றுக்கொள்வதாக கார்த்திகா நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கா

## ஏலத்தில் கல்லறை



ஹொலிவூட்டின் அழியா சின்னமான மர்லின் மன்றோவின் கல்லறைக்கு நேர் மேலே உள்ள கல்லறை ஏலத்தில் விற்பனைக்காக விடப்பட்டுள்ளது. 5 லட்சம் அமெரிக்க டொலர்களில் ஆரம்பித்த கேள்வித் தொகை, ஓரிரு தினங்களில் 7 லட்சம் வரை போயிருந்தது.

லொஸ் ஏஞ்சல்ஸ், பெவெளி ஹில்ஸில் வசிக்கும் திருமதி எல்சி பொஞ்சர், லொஸ் ஏஞ்சல்ஸ், வெஸ்ற்வூட் பிரத்தியேக சேமக்காலையில் தனது கணவரின் கல்லறையை 'காலிசெய்து' அதில் புதிய ஒருவர் 'வாசம்செய்ய' இடமளிக்கிறார்.

'மர்லின் மன்றோவுக்கு நேர்மேலே நித்திய வாழ்வைக்கழியுங்கள்' என்று குறிப்பிடும் விளம்பரம் 'ஈபே' யில் வெளியாகியிருப்பதாக 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது. தனது பெவெளி ஹில்ஸ் மாளிகையின் 16 லட்சம் டொலர் கடனை தீர்ப்பதற்கு வேண்டிய பணத்தை உறுதி செய்வதற்காகவே எல்சி இந்த முடிவை எடுத்திருக்கிறார். "என்னுடைய பிள்ளைகளுக்கு அதனை நான் கடனில்லாமல் விட்டுவைக்கவேண்டும். அதற்கு, இதைவிட நேர்மையான வழி இல்லை'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

23 ஆண்டுகளுக்கு முன்னர் தனது 81ஆவது வயதில் காலமான பெரும் வர்த்தகரொருவரான றிச்சாட் பொஞ்சர், இரண்டு புதைகுழிகளை அங்கு வாங்கியிருந்தார். தனக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் புதைகுழிக்கு கணவரின் சடலத்தை மாற்றவும், தன்னுடைய மரணத்தில் தனது சடலத்தை தகனம்செய்யவும் திருமதி பொஞ்சர் தீர்மானித்திருக்கிறார்.

மர்லின் மன்றோ 1962இல், அவரது 36ஆவது வயதில் காலமானார்.

பிஜி

### பொதுநல அமைப்பில் இடைநிறுத்தம்



ஜனநாயக நடவடிக்கைகளில் நாட்டத்தை மறுப்பதாக தெரிவித்து பொதுநல நாடுகள் அமைப்பிலிருந்து பிஜி முழு அளவில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு சதிமுயற்சி ஒன்றில் ஆட்சியைக் கைப்பற்றிய கொமாண்டர் பிராங் பைனிமராமா, அடுத்த ஆண்டில் தேர்தலை நடத்தும்படியான பொதுநலநாடுகள் அமைப்பின் வற்புறுத்தலை ஏற்க மறுத்ததால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பொதுநல நாடுகள் அமைப்பிலிருந்து பிஜி இடைநிறுத்தப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

தனது சீர்திருந்த நடவடிக்கைகளின் ஓர் அம்சமாக 2014இலேயே பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவிருப்பதாக தெரிவிக்கும் பைனிமராமா, இன அடிப்படையிலான வாக்களிப்பை ஒழிக்கும் விதத்திலான பல சீர்திருத்தங்கள் தேர்தலுக்கு முன்னதாக செய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கிறார். ஆனால், அவரது ஆட்சியின்கீழ் பிஜியின் அரசியலமைப்பு இடைநிறுத்தப்பட்டு, எதிரிகள் தடுத்துவைக்கப்படுவதாகவும் பேச்சுரிமை பறிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எதிர்க்கட்சிகளுடன் மீண்டும் பேசுவார்த்தைகளில் ஈடுபட்டு, 2010 ஒக்ரோபரில் நியாயமான ஒரு பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சம்மதத்தை தெரிவிக்க செப்ரம்பர் முதலாம் தேதிவரை அளிக்கப்பட்டிருந்த காலக்கெடு முடிவடைந்ததால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொதுநல நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்திருக்கிறார்.

இந்த இடைநிறுத்தத்தினால் பிஜிக்கான பொதுநல நாடுகளின் உதவி நிறுத்தப்படுவதோடு, 2010இல் நடைபெறவிருக்கும் பொதுநல நாடுகளின் விளையாட்டுப் போட்டியிலும் பிஜி கலந்துகொள்ள அநுமதிக்கப்படமாட்டாது.

பாகிஸ்தான்

### கான் விடுதலை




பாகிஸ்தானை ஓர் அணுவாயுத நாடாக்குவதில் பெரிதும் உதவிய அணுசக்தி விஞ்ஞானி கலாநிதி அப்துல் காதர் கான், அவருக்கு விதிக்கப்பட்டிருந்த வீட்டுத் தடுப்புக்காவலிலிருந்து விடுதலைபெற்றுள்ளார். 2004இல் லிபியா, வட கொரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு அணுவாயுத தொழில்நுட்பங்களை பரிமாறியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை கான் ஏற்றுக்கொண்டபோது, முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் அவருக்கு மன்னிப்பு வழங்கியிருந்தார்.

எனினும், தம்மீது போலி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதாகவும், குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி தாம் வற்புறுத்தப்பட்டதாகவும் கான் பின்னர் தெரிவித்திருந்தார். கானை விசாரிப்பதற்கு அமெரிக்காவும் பல தடவைகள் பாகிஸ்தானிடம் கோரிக்கைவிடுத்தபோதும் பாகிஸ்தான் அதனை நிராகரித்தேவந்தது.

இந்தியா

### யஸ்வந் சிங் மேன்முறையீடு




பாகிஸ்தானின் 'தந்தை' முஹமட் அலி ஜின்னா பற்றி, பாரதிய ஜனதா கட்சியின் (பா. ஜ. க.) முன்னாள் தலைவர் யஸ்வந் சிங் எழுதிய நூலை குஜராத் மாநில பா. ஜ. க. அரசு தடைசெய்ததை எதிர்த்து, யஸ்வந் சிங் இந்திய உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்தியாவின் முதலாவது உள்நாட்டமைச்சர் வல்லபாய் பட்டேல் பற்றி அவமரியாதையான குறிப்புகள் நூலில் காணப்படுவதாக மாநில அரசு தெரிவிக்கிறது.

இந்திய சுதந்திர போராட்டத்தில் 'இரும்பு மனிதர்' என்று வர்ணிக்கப்படுபவர் வல்லபாய் பட்டேல். 1947இல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் தனி நாடாக பிரிக்கப்பட்டதில் ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல் உள்பட, காங்கிரஸ் கட்சி தலைவர்கள் வகித்த பங்குபற்றி நூலில் ஆராயப்படுகிறது.

யஸ்வந் சிங் இந் நூலை வெளியிட்டமைதொடர்பில் அவரை கட்சியிலிருந்து விலக்கிய பா. ஜ. க., நூல் பற்றிய கருத்து எதனையும் வெளியிடவில்லை.

71 வயதுடைய முதிர்ந்த அரசியல்வாதியான யஸ்வந் சிங், பா. ஜ. க. அமைச்சரவைகளில் நிதி அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் பணிபுரிந்தவர்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பரபரப்புடன் இந்நூல் விற்பனையாகும்போது, குஜராத் மாநிலத்தில் விதிக்கப்பட்ட தடை 'சிந்திப்பதற்கு விதிக்கப்பட்ட தடை' என்று யஸ்வந் சிங் தெரிவித்துள்ளார்.



இலங்கை

## சர்வதேச கண்டனம்

இலங்கையில் பத்திரிகையாளர் ஜே. எஸ். திசநாயகத்துக்கு விதிக்கப்பட்ட 20 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக பரவலான சர்வதேச கண்டனம் எழுந்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீறி அவர் செயல்பட்டதாக அவருக்கு இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் எழுதிய கட்டுரைகள் இனவாதத்தை தூண்டுவன என்று மேல் நீதிமன்றம் அதன் தீர்ப்பில் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து பணத்தைப் பெற்றதாகவும் இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நியூ யோர்க்கை மையமாகக் கொண்ட 'ஹியூமன் றைற் வாச்' என்ற மனித உரிமை அமைப்பு, இத் தீர்ப்பு கருத்துச் சுதந்திரத்தை மீறுவதென்றும், நிபந்தனையற்றவிதத்தில் திசநாயகத்தை விடுதலை செய்யும்படியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கோரியுள்ளது. தனது அரசியல் கருத்தை வெளிப்படுத்தியதுதான் இந்த பத்திரிகையாளர் செய்த ஒரே குற்றம் என்றும் அது தெரிவித்துள்ளது.

இச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்ட முதல் பத்திரிகையாளர் இவரே. இலங்கையில் கடந்த ஆண்டுகளில் குறைந்தது 11 பத்திரிகையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக நியூ யோர்க், பத்திரிகையாளர் பாதுகாப்பு கமிட்டியும், 2006ஆம் ஆண்டிலிருந்து செய்தித் துறையைச் சேர்ந்த குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பாரிசை மையமாகக்கொண்ட எல்லைகளற்ற பத்திகையாளர்கள் சங்கம், இந்த ஆண்டுக்கான 'துணிச்சலும் மனோதர்மமும்' மிக்க பத்திரிகையாளருக்கான, 'பீற்றர் மக்லெர் விருதை' திசநாயகத்துக்கு வழங்கியுள்ளது.

உலகின் மிகப்பெரும் பத்திரிகையாளர் அமைப்பான சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனமும் இந் நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்திருப்பதுடன், இத் தீர்ப்பு அளவு மீறியதும் கொடுமையானதும் மனிதாபிமானமற்றது என்றும் தெரிவித்துள்ளது.

2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு ஏற்கனவே ஒன்றரை ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டிருந்த திரு திசநாயகத்தை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, உலக பத்திரிகை சுதந்திர தினத்தையொட்டி மே மாதம் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் இத் தீர்ப்பு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளது.




மியன்மார்

## விசாரணைக்கு அநுமதி

மியன்மார் எதிர்க்கட்சி அரசியல் தலைவி ஆங் சான் சூ கியிக்கு விதிக்கப்பட்டுள்ள மேலதிக ஒன்றரை ஆண்டு தடுப்புக்காவலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீடு மியன்மார் நீதிமன்றமொன்றில் செப்ரெம்பர் 18ஆம் தேதி விசாரிக்கப்படவுள்ளது.

அழைக்கப்படாத விருந்தாளியாக அமெரிக்க பிரஜை ஒருவரை தனது இல்லத்தில் சந்தித்ததன் மூலம் பாதுகாப்பு சட்டத்தை அவர் மீறியதாக தெரிவித்து இத் தடுப்புக்காவல் நீடிப்பு விதிக்கப்பட்டது. அமெரிக்கர் ஜோன் யெற்றோவுக்கு ஏழு ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டபோதும், அமெரிக்க செனற்றர் ஒருவரின் விஜயத்தையடுத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

சூ கியிக்கு விதிக்கப்பட்ட இத் தண்டனைமூலம் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் அவர் பங்குகொள்வது தடைப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## பூதவுடல் அடக்கம்



ஜூலை 25ஆம் தேதி மரணமடைந்த 'பொப் இசை மன்னர்' மைக்கல் ஜக்ஸனின் பூதவுடல் லொஸ் ஏஞ்சல்ஸ் வெளிப்பகுதியில், பிரசித்திபெற்ற கிளென்டேல், போறெஸ் லோன் ஞாபகார்த்த பூங்காவில் செப்ரெம்பர் 3ஆம் தேதி அடக்கம் செய்யப்பட்டது.

அழைக்கப்பட்டவர்களும் குடும்பத்தவர்களுமாக 200 பேர் கலந்துகொண்ட தனிப்பட்ட நல்லடக்க வைபவமாக இது நடைபெற்றது.

50 வயதான மைக்கல் ஜக்ஸன், உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, சிபாரிசுசெய்யப்பட்ட மருந்துகள் அளவுக்கு அதிகமான விதத்தில் உடம்பில் செலுத்தப்பட்டதால் மரணமானதாக லொஸ் ஏஞ்சல்ஸ் மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்திருக்கிறார். இக் கைமோச கொலைத் தீர்ப்பு, சிலர் மீது குற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பை அதிகரித்தாலும் சந்தேக நபர்களாக எவரும் ,துவரை குறிப்பிடப்படவில்லை.

# Selection
# Select.gb.com
# Selected

Do you want to
**Rent, Buy, Sell, Mortgage
or Insure your
Property** Look no further

We've got it all covered.

## Free EPC

**Free energy performance certificate
for properties instructed on full management.
Typical price of an EPC is £ 60.00+ VAT**

# 0845 470 1500

# இடைத்தேர்தல் என்ற வியாபாரம்

## கொடுப்பவர்களுக்கு கூச்சமில்லை; வாங்குபவர்களுக்கும் வெட்கமில்லை



**கெட்டிக்கார அரசியல்வாதிகளும் கெட்டிக்கார மக்களும் சேர்ந்து நடத்தும் வியாபாரமே இடைத்தேர்தல். வியாபாரி தனியாக வியாபாரம் செய்துவிடமுடியுமா?**

வியாபாரத்தில் 'டெஸ்ட் மார்க்கெட்டிங்' என்ற ஒரு முறை உண்டு. அதாவது, ஒரு பண்டம் எப்படி விலைபோகிறது, வாடிக்கையாளர்களின் ஆதரவு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய குறிப்பிட்ட இடங்களில் அந்தப் பண்டங்களை விற்பனை செய்வார்கள். அங்கே விற்கும் பண்டத்தின் அளவைக் கூட்டலாம். வித்தியாசமான 'பக்கிங்' செய்யலாம். கூடுதலாக, உபரியாக

சில பொருள்களைத் தரலாம். இதே உத்திதான் அரசியல் வியாபாரத்திலும் புகுத்தப்படுகிறது. அதற்கான களமே இடைத்தேர்தல்.

இடைத் தேர்தல்கள் ஆளுங்கட்சிக்கு வைக்கப்படும் பரீட்சை என்ற நிலைமை மாறிவிட்டது. அவை எதிர்க் கட்சிகளை சங்கடப்படுத்துவதற்காகவே நடத்தப்படுகின்றன என்ற நிலைமை உருவாகிவிட்டது. கட்சி மாறுவதால் பதவியைத் துறந்துவிட்டு அதே நபரோ, வேறு ஒருவரோ இடைத் தேர்தலில் நிற்கலாம். ஆனாலும், சாவுக்குப் பின் நடைபெறும் தேர்தல்களில் சோகத்தின் சுவையும் லாபமும் தனி. ஒரு காலத்தில் இறப்புக்கு அநுதாப அலை வீசியது. இப்போது பண அலை, பண்ட அலை தவிர்த்து வேறு எந்த அலையும் வீசுவதில்லை. இடைத் தேர்தலில் எல்லா கட்சிகளும் அதிக பணம் செலவழிக்கின்றன. ஆனால், ஒன்றையொன்று குறைகூறுகின்றன. ஆளும் கட்சி கூடுதலாக செலவழிக்கும். 'ஆளும்' என்பதற்கு பொருளிருக்கிறது அல்லவா, அதனால்.

சிவலோக பதவி, வைகுண்ட பதவி அல்லது வேறு ஏதாவது அரசியல் பதவிக்குப் போவதால் இடைத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. இந்தமுறை ஒரு கட்சியிலிருந்து நீங்கியதால் எம். எல். ஏ. பதவியை இராஜினாமா செய்த நபர், அடுத்த சில மாதங்களில் அதே தொகுதியில் நின்று ஜெயித்தார். அப்போது ம. தி. மு. க., இப்போது தி. மு. க. இப்படிப்பட்ட இடைத் தேர்தல் மக்களை முட்டாள்களாக்குகின்றன என்கிறார் எழுத்தாள நண்பர் சுப்ரபாலன், ஏதோ, மற்றைய தேர்தல்கள் எல்லாம் மக்களை ஞானவான்களாக்கி விடுவது போல. இதற்குப் பதிலாக, பொதுத்தேர்தலில் இரண்டாம் இடத்தில் வந்தவரையே, தேர்தலுக்கு அவசியமில்லாமல் மக்கள் பிரதிநிதியாக அறிவித்து விடலாமே. தேர்தல் கமிஷன் சட்டத்தை திருத்தலாமே என்றும் சுப்ரபாலன் யோசனை சொல்கிறார். இரண்டாமவருக்கு பிறகு மூன்றாமவர் என்று வெற்றி வரிசையை தேர்தல் கமிஷன் அறிவித்துவிட்டால், கடைசி நபரைக் கண்டு முன்வரிசைக்காரர்கள் பயப்பட வேண்டும், புரிகிறதா?

தமிழ்நாட்டில் ஐந்து தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ஆளும் கட்சிக் கூட்டணியே வெற்றி பெற்றது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ. இ. அ. தி. மு. க.) இடைத் தேர்தல்களைப் புறக்கணித்ததால் ஆளும் கட்சிக்கு இந்த வெற்றி என்று சொல்விட முடியாது. அ.இ.அ.தி.மு.க.வும் ஆளும் கட்சியாக விருந்து இடைத் தேர்தல்களைச் சந்தித்தது; வென்றது. பைசா செலவழிக்காமல் பெற்ற வெற்றி அல்ல அது.

**அரசியல்வாதிகளின் கற்பனை வரண்டுபோவதில்லை. தேர்தல் கமிஷன் எப்படி வேண்டுமானாலும் கண்காணிக்கட்டுமே. அந்த அதிகாரிகளின் கண்களைக் கட்டிவிட முடியாதா?**

இடைத்தேர்தல்களில் அரசியல்வாதிகள் மட்டும் கெட்டிக்காரர்கள் என்று சொல்வது மக்களை மட்டம் தட்டுவதாகும். அப்படி மக்களைக் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது. கெட்டிக்கார அரசியல்வாதிகளும் கெட்டிக்கார மக்களும் சேர்ந்து நடத்தும் வியாபாரமே இடைத்தேர்தல். வியாபாரி தனியாக வியாபாரம் செய்து விடமுடியுமா? வாடிக்கையாளர்கள் பொருள்களை வாங்கினால்தானே எதுவும் வியாபாரமாகிறது.

எனவே, இடைத் தேர்தல்களில் பங்குபெறும் வாக்காளப் பெருமக்களையும் பாராட்டுவது நம் ஜனநாயக கடமையாகிறது. அசல் லட்டுக்கு, வெளியே கொஞ்சம் முந்திரிப் பருப்போ அல்லது 'கன்னியை முத்தமிடு' பழமோ - தமிழில் சொன்னால் உங்களுக்கு புரியமாட்டேன் என்கிறது - அதுதானய்யா கிஸ்மிஸ் பழம் - வெளியே தெரிகிறமாதிரி இருக்கும். சில லட்டுக்களில் ஏலக்காயின் தோல் கொஞ்சமாக வெளியே தெரியும். வேறு சிலவற்றில் கராம்பின் கொம்பு அல்லது காம்பு தெரியும். ஆனால் பாருங்கள், இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கு மட்டுமே தெரியவரக்கூடியது லட்டுக்குள் இருக்கும் தோடு, மூக்குத்தி அல்லது மோதிரம். விதம்விதமான லட்டுக்களைத் தயாரிக்க சொல்லிக்கொடுக்கும் எந்த சமையல் குறிப்புப் புத்தகத்திலும் இந்தப் புதிய சமையல்முறை தெரிவிக்கப்பட்டிருக்காது. இது முழுக்கமுழுக்க தேர்தல் சமையல்!

ஒரு காலத்தில் தேர்தல் பிரசாரப் பணி செய்பவர்களுக்கு மட்டுமே அந்தக்கால வேட்பாளர்கள் முடிந்த அளவுக்கு ஏதோ சாப்பாடு போட்டார்கள். இப்போது அது விருந்து, தடபுடல் விருந்து, பிரியாணி வகையறா என்று வளர்ந்துவிட்டது. இப்போது, வாக்காளர்களுக்கும் விருந்து கொடுக்கப்படுகிறது இலைக்கு மேலும், இலைக்கு அடியிலும். வாக்காளப் பெருமக்கள், பரிமாறப்பட்ட இலையின் மேல் உள்ளனவற்றை வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு இலைக்கு அடியில் போடப்பட்டுள்ளதை எடுத்துப் பையில் வைத்துக்கொள்வார்கள்.

கல்யாண வீடுகளில், மண்டபங்களில் மேஜை, நாற்காலி போட்டு சாப்பாடு போடுபவர்கள் மேஜைமீது நீளமான காகிதத்தை விரிப்பார்கள். அதன் மீது இலையைப் போடுவார்கள். போகிற போக்கைப் பார்த்தால் சாதாரண செய்தித்தாள் காகிதத்துக்கு பதிலாக இனி ரூபாய் நோட்டுக்கள் ஒட்டப்பட்ட காகிதங்களையே அரசியல்வாதிகள் விரிப்பார்கள்போலிருக்கிறது. கொடுப்பவர்களுக்கு கூச்சமில்லை. வாங்குபவர்களுக்கும் வெட்கமில்லை.

இலைக்கடியில் வைத்தாலும் லட்டுக்குள் வைத்தாலும் சமாச்சாரங்கள் வெளியே வந்துவிடுகின்றன என்பதனால், கடைகளில் முன்னேற்பாடு செய்துகொண்டு வாக்காளர்களிடம் 'ரோக்கின்களை' கொடுத்துவிடுகிறார்கள் சில அதிபுத்திசாலி அரசியல்வாதிகள். அந்தந்தக் கடைகளுக்கு அவரவர் போய், வேண்டிய பொருள்களையெல்லாம் வாங்கிக்கொள்ளலாம்.

**இதுபோல், இனிமேல் தேர்தல்கள் தோறும் வாக்காளர்களுக்கு பணமும் பண்டங்களும் தர புதுப்புது ஏற்பாடுகள் வரலாம். அரசியல்வாதிகளின் கற்பனை வரண்டுபோவதில்லை. தேர்தல் கமிஷன் எப்படி வேண்டுமானாலும் கண்காணிக்கட்டுமே. அந்த அதிகாரிகளின் கண்களைக் கட்டிவிட முடியாதா? போகிற போக்கைப் பார்த்தால் தேர்தல்கள் நடத்தியதில் தம் அநுபவத்தை வைத்துக்கொண்டே தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தேர்தலில் நிற்கலாம் அல்லது தேர்தலில் வெற்றிபெறுவது எப்படி என்று புத்தகங்கள் எழுதலாம். வியாபாரம் ஐயா, வியாபாரம்!**

■



**இரா. சம்பந்தன்**

இலங்கை,
தமிழ் தேசிய
கூட்டமைப்பு
தலைவர்

# சுயநிர்ணய உரிமையுடன் அரசியல் தீர்வு

**இலங்கை தமிழ் அரசியலில் அடுத்த கட்டம் என்ன?**

**சம்பந்தன்:** எம்முடைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை மிகுந்த நிதானத்துடன் நாம் சிந்திக்கவேண்டும்; மேற்கொள்ளவேண்டும். வெறும் உணர்ச்சிபூர்வமாக எந்த முடிவுகளையும் நாம் எடுத்துவிடமுடியாது. எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளையும், அவர்களுடைய மனோநிலையையும், அங்குள்ள உண்மையான நிலவரங்களையும் நாம் சரியாக புரிந்துகொள்ளவேண்டும்.

எம்முடைய பாரம்பரிய பிரதேசத்தில் எம்முடைய சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சுயாட்சியை நாம் வென்றாகவேண்டும். அதற்கானவிதத்தில் சரியான் வழிகளில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்த அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை நாம் தயார்செய்துகொண்டிருக்கிறோம். அதில் இந்தியாவின் ஆதரவையும் திரட்ட நாம் முற்படுவோம்.

**தமிழ் தேசிய கூட்டமைப்பு அதன் சொந்த குரலாகவன்றி, புலிகளின் குரலாகவே ஒலிக்கிறதென்பதும், பல தடவைகளில் நீங்கள் புலிகளின் விருப்புக்கு அமைய, இந்தியாவுடன் ஓர் உறவைப் பேணவில்லை என்பதும் பொதுவாக உங்கள்மீதான சில குற்றச்சாட்டுக்களாக இருந்தனவே?**

**சம்பந்தன்:** இவை உண்மையானவை அல்ல. பாராளுமன்றத்தில் நாம் எம்முடைய கருத்துக்களைத்தான் எப்போதும் பேசிவந்திருக்கிறோம். இந்தியாவுடன் ஓர் உறவை பேணியதன் காரணமாகத்தான் நாம் இப்போது இந்திய தலைவர்களைச் சந்திக்கவும், அவர்களுடன் கலந்தாலோசிக்கவும் முடிகிறது.

நாம் விடுதலைப் புலிகளின் தியாகத்தை மதிக்கிறோம். ஆனால், அவர்களுடைய ஆயுத போராட்ட பாதை கடைசிவரையில் தீர்வுக்கு இட்டுச்செல்லாது; ஜனநாயகத்துடன்கூடிய ஓர் அரசியல் தீர்வுதான் ஈற்றில் எமது பிரச்னைக்கு தீர்வைத்தரும் என்பதை ஆரம்பத்திலேயே திரு பிரபாகரனிடம் நான் கூறியிருந்தேன். ஆகவே, அவர்களின் குரலாக நாம் செயல்பட்டோம் என்பது சரியானதல்ல.

**சுயாட்சியுடனான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரித்துக்கொண்டிருப்பதாக கூறினீர்கள். முன்னர், கலாநிதி நீலன் திருச்செல்வம் தயாரித்த திட்டம் ஒன்று இருக்கிறதே?**

**சம்பந்தன்:** ஆம்; அது மிக அருமையான அதிகார பரவலாக்கல் திட்டம். அதில் என்னுடைய பங்கும்கூட நிறையவே இருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாக அதை 'நாம்' எதிர்த்தோம்.

**யுத்த வெற்றிக்குப் பின்னர் அரசாங்கத்தின் மனோநிலையையும் போக்கையும்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**சம்பந்தன்:** இவர்களின் இந்த மனோநிலையும் போக்கும் வெகுகாலம் நீடிக்கமுடியாது. மனித உரிமை தொடர்பான பிரச்னைகள், பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பான பிரச்னைகள், பொருளாதார பிரச்னைகள், அரசியல் பிரச்னைகள் என்று பலவற்றை மூடிமறைத்து இவர்கள் இப்போது ஓர் இறுமாப்புடன் நடந்துகொள்கிறார்கள். ஆனால், இவை அனைத்தும் வெடித்து, இவர்கள் அவதிப்படுகின்ற ஒரு நிலை விரைவில் ஏற்படும்.

**தமிழ் மக்களுடைய வரலாற்றில் ஓர் அவலம் நிறைந்த நிலையில் அவர்கள் தள்ளப்பட்டுள்ளபோது, தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஓர் ஒற்றுமை ஏற்படவில்லை. அப்படி ஓர் ஒற்றுமைபற்றி - கூட்டு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**சம்பந்தன்:** மக்களுக்கு நல்லதொரு தீர்வு, விமோசனம் ஏற்படுமென்றால் எவருடனும், எந்த பிசாசுடனும், மஹிந்த ராபக்ஷவுடனும்கூட கூட்டுச்சேர நாம் தயங்கமாட்டோம்; தயாராகவே இருக்கிறோம்.

**விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் யுத்த பிரதேசத்தில் அகப்பட்டு, பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளும் ஏற்பட்ட வேளையில், அந்த உயிரிழப்புகளையும் அவலங்களையும் தவிர்த்து, மக்களை அங்கிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் ஏன் மேற்கொள்ளவில்லை?**

**சம்பந்தன்:** எமது பாரம்பரிய பிரதேசம் என்று நாம் கொண்டாடும் இடத்திலிருந்து எமது மக்களை வெளியேறும்படி நாம் எப்படி கூறமுடியும்?

**யுத்த அவலத்துக்குப்பின்னர் இப்போது மூன்று லட்சம் மக்கள் முகாம்களில் அவலப்படுகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளான நீங்கள் இன்னமும் அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இந்த மனித உரிமைமீறல் நடவடிக்கை தொடர்பிலும், உங்களை அங்கு அனுமதிக்காதது தொடர்பிலும் பாராளுமன்றத்தில் நீங்கள் காத்திரமான நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபட முடியும்தானே?**


**சம்பந்தன்:** மக்களை இப்படி வைத்திருப்பது சர்வதேச விதிமுறைகளுக்கு மாத்திரமல்ல, இலங்கையின் அரசியலமைப்புக்கே அது முரணானது. அத்துடன், பாராளுமன்றத்தில் எமது நடவடிக்கைகள் குறித்தும் சிந்திக்கலாம் என்றே நான் நினைக்கிறேன். ■

### புலிகளுடனான யுத்தம் முடிந்ததும் படைப்பிரிவில் மாற்றங்கள்

# அரசின் முன்னெச்சரிக்கை

## அதிகரிக்கும் இராணுவ செல்வாக்கு அரசுக்கு சவாலாகிவிடுமா?

தண்டாயுதன்



சரத் பொன்சேகா, புதிய இராணுவ தளபதி ஜகத் ஜயசூரியா

இலங்கையின் இராணுவத் துறையில் பல்வேறு தரங்களிலும் எதிர்பாராத பெரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராணுவம், கடற்படை, விமானப்படை என்பவற்றிலிருப்போர் மூக்கில் விரலைவைக்குமளவுக்கு இந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்ட யுத்தத்தில் பங்குபற்றிய படை அதிகாரிகள் பலரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலும் அவரது சகோதரரும் பாதுகாப்பு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவினாலும் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் பதவிமாற்றங்களுக்குள்ளாகியிருக்கின்றனர்.

இலங்கையின் ஆயுத படைகள் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே நன்கு திட்டமிடப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டவை. பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்குவந்த காலம்முதல் சுமார் இரண்டு தசாப்தங்களாக இந்த ஆயுதப் படைகள் பெரும்பாலும் சம்பிரதாயபூர்வமானவையாகவே இருந்து வந்தபோது, 1970ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட ஜே. வி. பி. கிளர்ச்சியின்போது இவை முழுஅளவில் பயன்படுத்தப்பட்டன. இதன்பின்னர், படிப்படியாக வடக்கு - கிழக்கில் தமிழ் தீவிரவாத போராட்டம் ஆரம்பமானதையடுத்து இலங்கை ஆயுதப்படைகளின் ஆளணிகள் என்பவை விசாலமடைய ஆரம்பித்தன.

21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் முப்படைகளும் மிக விரிவான முறையில் வளர்ச்சிகண்டு, தென்னாசியாவில் ஒரு சிறிய 'இராணுவ வல்லரசா'கவே இலங்கை விளங்குகிறது. எல்லைச் சண்டைகள் இலங்கைக்கு இல்லாதபோதிலும், உள்நாட்டின் இனப்பிரச்னை ஒரு பிரிவினைவாத போராக உருமாறி, மூன்று தசாப்தகால நீண்ட யுத்தத்துக்கு வழியமைத்திருந்தது. தமிழ் தீவிரவாத நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் வெறுமனே பிரிட்டிஷார் விட்டுச்சென்ற படைக்கலன்களையும், ஜே. வி. பி. யை அடக்குவதற்கு இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடு

**ஓர் இராணுவ தர்பார் ஏற்பட்டு, இராணுவ சதியோ அல்லது அதன்மூலமாக இராணுவ ஆட்சியோ ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இலங்கை அரசு உறுதியாக இருக்கிறது**

கள் வழங்கிய ஆயுத தளபாடங்களையுமே இலங்கையின் ஆயுத படைகள் பயன்படுத்தின. ஆனால், தமிழ் தீவிரவாதம் விரிவடைய ஆரம்பித்ததும் இலங்கையில் ஓர் ஆயுத போட்டியே ஆரம்பித்திருந்தது.

தமிழ் தீவிரவாத போராட்ட இயக்கமும், இலங்கை ஆயுத படைகளும் ஏட்டிக்குப் போட்டியாக ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டன. இருதரப்பிலுமே சர்வதேச ரீதியாக காணப்படும் நவீன ஆயுதங்கள் வந்துசேர ஆரம்பித்தன.

உள்நாட்டு யுத்தமென குறிப்பிடப்பட்டபோதிலும், இருநாடுகளுக்கிடையிலான யுத்தம்போன்றே காணப்பட்டது. தரையில் மட்டுமல்லாது, ஆகாயம், கடல் பரப்புகளிலும் விமானங்கள், கப்பல்கள் மற்றும் கனரக ஆயுதங்களென யுத்தம் வியாபித்திருந்தது. கடந்த மூன்று தசாப்த காலங்களில் இலங்கையில் பாதுகாப்புத் துறைக்கென கோடானுகோடி பணம் செலவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கையில் திரும்புமிடமெல்லாம் பாதுகாப்புப் படைகளின் பலம் மிகப்பெருமளவில் அதிகரிக்கப்பட்டிருந்தது. அடிமட்டங்களில் மட்டுமல்லாது, உயர் மட்டங்களிலும் தளபதிகளின் எண்ணிக்கை மிகக் கணிசமான விதத்தில் அதிகரிக்கப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கிலும், பின்னர் வடக்கே வன்னிப் பெருநிலப்பரப்பிலும் புலிகளுக்கெதிரான இறுதிக்கட்ட யுத்தத்தை முடுக்கிவிட்டிருந்தபோது, அரச பலத்துடன் இராணுவ நடவடிக்கைகள் பிரயோகிக்கப்பட்டன. இலங்கையில் வரலாறு காணாதவகையில் ஆயுதப்படையினரது ஆளணிகள் செயலில் இறங்கியிருந்தன.

இறுதியாக, யுத்தம் ஒரு முடிவுக்கு வந்ததும் ஜனாதிபதி ராஜபக்ஷவைவிட, ஆயுதப்படைத் தளபதிகளே மக்களால் புகழப்படும் நிலைமை காணப்பட்டது.

இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார பரிமாணங்களுக்கும் அப்பாற்பட்டவிதத்தில் ஆயுதப்படைகளின் வளர்ச்சி விரிவடைந்திருக்கக் காணப்பட்டது. இராணுவ கட்டமைப்பை அவதானிக்கையில், எண்பதுகளின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்தபோது, இராணுவத்தில் ஒரு மேஜர் ஜெனரல் பதவியே இருந்தது. ஆனால், தற்சமயம் சுமார் பத்துக்கும் மேற்பட்டதாக மேஜர் ஜெனரல் பதவிகள் இராணுவத்தில் காணப்படுவதோடு, இராணுவ படைப்பிரிவுகளும் நிறையவே அமைக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக படைத் தளபதிகளின் செல்வாக்கு அரசியல் ரீதியாகவும் விரிவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் பலமாகவே இருந்தன.

யுத்தம் முடிவுற்றதுமே நாடுபூராவும் ' படையினரைக் கௌரவிக்கும் வெற்றி விழாக்கள் நடத்தப்பட்டன. அலுவலகங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்களென போட்டியிட்டவாறு படையினரைக் கௌரவிக்கும் நடவடிக்கைகள் தென்னிலங்கையின் மூலைமுடுக்குகளெல்லாம் இடம்பெற்றன. கௌரவிக்கப்பட்டவர்களில் இராணுவ தளபதியாகவிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவே முக்கியமானவராக இருந்தார். இவர் மீதான மதிப்பு தென்னிலங்கையில் பெரிதும் அதிகரித்திருந்தது. முன்பிருந்த தளபதிகளால் சாதிக்க முடியாததொன்றை பொன்சேகா சாதித்துவிட்டாரென பட்டிதொட்டியெல்லாம் பேசப்பட்டது.

இத்தகைய சூழலிலேயே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உடனடியாக செயலில் இறங்கியது. இளைப்பாறும் வயதையடைந்திருந்த முப்படைகளிலுமிருந்த உயர் அதிகாரிகள், குறிப்பாக புலிகளுக்கெதிரான யுத்தத்தில் முக்கிய பங்காற்றியவர்கள் நாசுக்கான முறையில் அவர்களது பொறுப்புக்களிலிருந்து விலக்கப்பட்டனர்.

இராணுவ தளபதியாகவிருந்த ஜெனரல் சரத் பொன்சேகா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு, கூட்டுப்படைத் தளபதியாக பதவியிலமர்த்தப்பட்டார். இக் கூட்டுப்படைத் தலைமைப் பொறுப்பு படைகள்மீது நேரடி அதிகாரங்களைக் கொண்டிராத ஒரு சம்பிரதாயபூர்வ பதவியாகவே விளங்குகிறது.

இராணுவத்துக்கு அடுத்தபடியாக புலிகளைக் கடலில் எதிர்கொண்டு முறியடிப்பதில் கடற்படையினர் முக்கிய பங்காற்றினர். புலிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டுவருவதாகக் கருதப்பட்ட பல கப்பல்கள் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டிருந்தன. அத்துடன், கடற்புலிகளது கப்பல்கள், படகுகள் என்பவையும் முல்லைத்தீவு கடலில் இடம்பெற்ற மோதல்களின்போது மூழ்கடிக்கப்பட்டிருந்தன.

கடற்படைத் தளபதியாகவிருந்த வசந்த கரன்னாகொடவும் இராணுவ தளபதியுடன் தென்னிலங்கையில் பெரும் புகழ்ச்சிக்குள்ளாகியிருந்தார்.


எனவே, படைத் தளபதிகள் நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப்பெற ஆரம்பித்த தருணத்திலேயே படைத்தரப்பில் பெரும் மாற்றங்கள் ஜனாதிபதியினாலும் அவரது சகோதரரான பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் படைத்தளபதிகள் இளைப்பாறும் வயதெல்லையை அடைந்தவேளைகளிலும் அவர்களுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இப் பதவி நீடிப்பு வழங்குவது நிறுத்தப்பட்டு, புதியவர்கள் முக்கிய பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டனர். இராணுவம், கடற்படை ஆகியவற்றுக்கும் புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டனர். இப் புதிய நியமனங்களின்போது பல சிரேஷ்ட தளபதிகளின் சேவை மூப்பு, பதவிக்காலம் என்பவைகூட புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக, இதுவரை காலமும் முக்கிய பதவிகளிலிருந்த படை அதிகாரிகள் பலர் விரக்தியோடு தமது பதவிகளிலிருந்து ஓய்வுபெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர். கட்டவிழ்த்துவிடப்படிருந்த 'அசுர கணங்களை' யுத்தம் முடிவடைந்த பின்னர் மீளவும் கட்டிப்போடுவதுபோலவே, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் படைத்தரப்பைக் கையாண்டுள்ளது. இலங்கையில் ஆயுதப் படைகளின் ஆளணிகள் வியாபித்துள்ள நிலையில், ஓர் இராணுவ தர்பார் ஏற்பட்டு, இராணுவ சதியோ அல்லது அதன்மூலமாக இராணுவ ஆட்சியோ ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் இலங்கை அரசு உறுதியாக இருப்பதையே அவதானிக்க முடிகிறது. இலங்கை அரசியல் வரலாற்றில் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இராணுவ சதியொன்றுக்கான முஸ்தீபு மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் இடம்பெற்ற இச் சதிமுயற்சி, தகுந்த நேரத்தில் இனங்காணப்பட்டு, முறியடிக்கப்பட்டிருந்தது.

எனவே, விடுதலைப் புலிகளை முறியடித்ததையடுத்து இராணுவத்தின் கரங்கள் ஓங்கியிருந்த நிலையில் அரசியல் ரீதியாக அவர்கள் செல்வாக்குப் பெற்று, படைத்தரப்பு தனது ஆட்சிக்கு சவாலாக இருக்கக்கூடாது என்ற காரணத்தினாலேயே பாதுகாப்புத் துறையில் ஜனாதிபதி நன்கு திட்டமிடப்பட்டமுறையில் முக்கிய மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளதை அவதானிக்கமுடிகிறது. ■



**விடுதலைப் புலிகள் அமைப்பை அதன் தற்போதைய நிலையிலிருந்து ஓரளவு முன்னகர்த்தியிருக்கக்கூடியவர்**

## சிறப்பு சந்திப்பு | செல்வராசா பத்மநாதன்

அந்தத் தரப்பில் ஒரு புதிய குரலாக அது ஒலித்தது.

வெளிப்பட்ட தொனியிலும், வெளிப்பட்ட கருத்துக்களிலும் அது புதியது; மாறுபட்டது.

'அநாமதேயம்'; நேரடியாக பார்த்ததில்லை. அண்மைக்காலங்களில் பார்க்கும் புகைப்படம் அசலானதுதானா என்பதில் எப்போதும் சந்தேகம் இருந்தது.

ஆனால், சில தினங்களுக்கு முன்னதாக 'சனல்-4' தொலைக்காட்சியில் கேட்ட அதே குரல்.

வெகு நம்பிக்கையான ஒரு தொடர்பு ஏற்படுத்திவைத்த பரஸ்பர அறிமுகத்தில் ஏற்பட்ட பரஸ்பர நம்பிக்கை, அநாமதேயத்தில் ஓர் அந்நியோன்யத்தை ஏற்படுத்தியது. 'கே. பி.' பேசினார்.

'பேட்டி' என்ற விதத்தில்தான் பேச நினைத்திருந்தாலும், அதற்குப் புறம்பாகவும் பேசினார்.

இரண்டொரு தடவை முதலில் பேசியிருந்தபின்னர், ஓகஸ்ற் 2 ஆம் தேதி ஞாயிறும் அவர் பேசினார். அடுத்த இரண்டு, மூன்று தினங்களில் மீண்டுமொருமுறை பேசிவிட்டு, பேட்டியை முற்றுப்படுத்த எண்ணம். ஆனால்–

பேசமுடியாதே?

ஓகஸ்ற் 5ஆம் தேதி அவர் கைதானார்.

பேட்டியை என்னசெய்வது?

முக்கியமான சில அரசியல் விடயங்கள் தொடர்பில், பிரசுரிக்கத்தகுந்த விதத்தில் அவருடன் தொடர்ந்து சிலவற்றை பேசுவதாக இருந்தது.

சரி, பேசியவற்றை பிரசுரிப்போம்; முடிவுக்கு வந்தாயிற்று.

யாழ்ப்பாணத்தில், மயிலிட்டி கிராமத்தில் பிறந்த செல்வராசா பத்மநாதன், இன்று சர்வதேச அரங்கில் 'கே. பி.'

# நிரந்தர அரசியல்தீர்வு எமது பாரிய பொறுப்பு

## புதிய உறவு மலர்ந்து, இந்தியா எமக்கு துணையாக இருக்கும் என்றே நாம் நிச்சயமாக நம்புகிறோம்

மாலி

'ஆயுத கடத்தல்காரர்' என்று உலகில் சொல்லப்பட்டாலும், உலக வரலாற்றில் தம்மைப் பதித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய சூத்திரதாரி அவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச பொறுப்பாளராக இருந்த அவர், பிரபாகரனுக்கு பின்னர், பிரபாகரனின் அந்த ஸ்தானத்துக்கு வந்தவர் (தலைவர் என்றில்லாமல், தலைமைச் செயலாளர்).

இலங்கையில், விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று இலங்கை அரசு கொண்டாடும்வேளையில், சர்வதேச பொலிசாரால் தேடப்பட்டு, வெளிநாடு ஒன்றில் தலைமறைவாக இருந்துகொண்டு இப்பதவியை ஏற்ற பத்மநாதனின் அணுகுமுறை மாறுபட்டதாகவும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதாகவும் தெரிந்தது.

செப்டம்பர் 11 சம்பவத்துக்குப் பின்னர் உலக ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றத்தை ஏற்று, மாறிவரும் அந்த சூழலில் வன்முறை நடவடிக்கைகளைத் தவிர்த்து, ஜனநாயக ரீதியில் பன்முக கருத்துக்களும் மதிப்பளித்து, இலங்கையில் தமிழினத்தின் தேசிய உரிமை வென்றெடுக்கப்படவேண்டும் என்பது அவரின் எண்ணமாக அவரது பேச்சில் தெளிவாக தெரிந்தது.

இந்தவிதத்தில், இயக்கத்தின் போக்கை மாற்றி, இயக்கத்தைக் காப்பாற்றிவிட திரு பத்மநாதன் முல்லைத்தீவு யுத்தத்தின் கடைசி கட்டங்களில் பெரிதும் முயன்றமை தெரிகிறது.

இந்த விவகாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவல்ல, காத்திரமான உலக சத்திகளுடன் அவர் பெரிதும் முயன்றிருக்கிறார். அப்படியொரு சர்வதேச தொடர்பு அவருக்கு இருந்திருக்கிறது; பலருடன் நேரடி சந்திப்புகளும் நிகழ்ந்திருப்பதாகவே தெரிகிறது.

1981இல் நீர்வேலி வங்கிக் கொள்ளையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்த திரு பத்மநாதன், ஆரம்பத்தில் ரெலோ இயக்கத்தைச் சார்ந்திருந்தாலும், பின்னர் பிரபாகரனுடன் இணைந்துகொண்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அவரது மாணவகால வாழ்வில் அரும்பிய காதலையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டுக்கு காணிக்கையாக்கியவர் என்பதும் சொல்லப்படுகிறது.

கண்ணியமான ஒரு பண்பும், யதார்த்தமான சிந்தையும் விசுவாசமும் அந்த 'அநாமதேயத்தின்' உருவமாக தெரிந்தன.

விடுதலைப் புலிகள் அமைப்பை அதன் தற்போதைய நிலையிலிருந்து ஓரளவு முன்னகர்த்தியிருக்கக்கூடியவர் பத்மநாதன் என்றே தெரிந்தது.

**விடுதலைப் புலிகள் அமைப்பின் புதிய தலைவராக நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். இதன்மூலம், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மறைவு உத்தியோகபூர்வமான விதத்தில் ஊர்ஜிதப்படுத்தப்படுவதாகவே கொள்ளலாம். அப்படியெனின், இது தொடர்பில் நிலவும் குழப்பம் ஏன், எப்படி ஏற்பட்டது?**

**பத்மநாதன்:** எமது தலைவர் வீரமரணம் அடைந்த யதார்த்த உண்மையை நாம் ஏற்றாக வேண்டும். இது, கனவில்கூட நாம் ஏற்றுக் கொள்ள விரும்பாத, எம்மால் ஈடுசெய்ய முடியாத ஒன்று. இதன்மூலம் எம்முடைய விடுதலைப் போராட்ட வரலாற்றில் நெருக்கடி மிகுந்த, துயர்படிந்த காலகட்டம் ஒன்றினுள்

நாம் நிலைகுலைந்துபோய் நிற்கின்றோம். இந்த நிலைமைதான் இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதில் தயக்கத்தைத் தோற்றுவிக்கிறது. ஆனால், எமது தலைவரும், எம் மண்ணுக்கு வித்தாகிப்போன மாவீரர்களும், தம் உயிரைத் துறந்த பொதுமக்களும் எம்மிடம் கையளித்துச் சென்ற எமது உரிமைக்கான போராட்டத்தை, மாற்றமடைந்துவிட்ட கள நிலைமைகளிலும், உலக சூழலிலும் பக்குவமாக முன்னெடுத்துச் சென்று, நாம் நிர்ணயித்த இலக்கை அடைய வேண்டிய பாரிய பொறுப்பு இன்று எம்முடையது. அந்தவிதத்தில், அடுத்து எமது போராட்ட முறையை அரசியல் இராஜதந்திர முறையில் முன்னெடுப்பதே சாத்தியமானதும் தாக்கமானதும் ஆகும். இதனை, எம்முடைய ஆயுதப்போர் நெருக்கடி மிகுந்த ஒரு கட்டத்தை எய்திய வேளையில் எமது தலைவர் தீர்மானித்தார். அதற்கு அமையவே நாம் எமது ஆயுதங்களை அப்போது மௌனிக்கச்செய்தோம். ஆனால், அது போதிய அவகாசத்தை அப்போது கொண்டிருக்கவில்லை.



**இலங்கைக்கு வெளியேதான் தமிழர்கள் தமது உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான செயல்பாடுகளில் தீவிரம் கொள்வது அவசியமாகிறது**

'போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால், இலக்கு மாறாது' என்று 1987 ஆம் ஆண்டிலேயே எமது தலைவர் குறிப்பிட்டிருந்தார். இப்போது நாம் வந்தடைந்துள்ள இடத்திலிருந்து எமது போராட்ட இலக்கினை அடைவதற்கு எமது பாதையை - எமது போராட்ட வடிவத்தை மாற்றுவது தவிர்க்க முடியாததாகிறது. ஒற்றைத் துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது இயக்கம் மரபுரீதியான இராணுவ யுத்தத்தில் ஏற்படுத்திய இமாலய சாதனைகளில் பெற்ற வெற்றிகள் சர்வதேச ரீதியில் ராஜதந்திர வாசல்களை எமக்கு திறக்கச்செய்தன. எனினும், சர்வதேச நலன்களும் எமது நலன்களும் ஒத்திசையாது போனமையால், திறந்த அந்த வாசல்களினூடே பெரிதாக எதையும் நாம் பெற்றுவிட முடியவில்லை. அடிப்படையில் இரண்டு காரணங்கள் நமக்கு தடையாகவிருந்தன. ஒன்று; தெற்காசியாவினதும் இந்துசமுத்திர பிராந்தியத்தினதும் கேந்திர முக்கியத்துவத்தில், இலங்கை ஒரே நாடாக பேணப்படுவதையே தமக்கு வாய்ப்பாக, இந்தியாவோடு அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளும் கருதின. இது, எமது தனிநாடு கோரிக்கைக்கு பாதகமானதாகியது.

மற்றையது, அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பின்னரான உலக நிலைமையில் எமது போராட்டமும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு, எப்படியும் இலங்கையில் ஆயுத போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் உலகநாடுகள் அனைத்தும் கருத்தொருமைப்பாட்டை எய்தின. இது எமது ஆயுத போராட்டத்துக்கான ஆதரவை சாத்தியமற்றதாக்கியது. இலங்கை அரசாங்கத்துக்கு இவை பெரு வாய்ப்பாகின. இந்த நிலையில்தான் நாம் ஆயுத போராட்டத்தைக் கைவிட்டு, அரசியல் ராஜதந்திர நடவடிக்கைகளில் ஜனநாயக முறையில் பல்வேறு கருத்துக்களுக்கும் இடம் கொடுத்து, அழிவுகள் இல்லாதவிதத்தில் சாத்வீக வழியில் அடுத்த கட்டத்தைத் தொடர தீர்மானித்தோம்.

**சாத்வீக நடைமுறை பயன்தரமாட்டாது ஆயுத போராட்டமே ஓரேவழி என்றுதானே அந்த வழியை நம்பிய சிலரின் வாழ்வும்கூட அப்போது மறுக்கப்பட்டது?**

பத்: நமது இனத்தின் விடுதலைக்கான ஒரு பெரும் அடித்தளத்தை இந்த ஆயுதப் போராட்டம் ஏற்படுத்தியிருக்கிறது. சுயநிர்ணய உரிமை, தாயக தேசியம் என்ற கோட்பாடுகள் வலுப்பெற்றிருக்கின்றன. புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தனிநாடுக்கான ஆதரவுத் தளம் பரவலாகியிருக்கிறது.

அத்துடன், சாத்வீகத்தை நாம் முற்றுமுழுதாக எதிர்த்தவர்களும் அல்லர். தியாகி திலீபன் இதற்கான சான்றாக எப்போதும் திகழ்கிறார். நாம் இப்போது எமது விடுதலை இலட்சியத்தில் உறுதியாக நின்றுகொண்டு எமது போராட்ட வடிவத்தை மாற்றுகிறோம். இதன் மூலம் சர்வதேச நலன்களுடன் முரண்படும் எமது நடவடிக்கை ஒன்றைத் தவிர்க்கிறோம். அதேவேளை, நமது தமிழ் ஈழ இலட்சியத்திலிருந்து நாம் பின்வாங்க முடியாது. இலங்கையில் பிரிவினையை இப்போது விரும்பாத சர்வதேச சக்திகளின் போக்கில் மாற்றங்கள் காலப்போக்கில் ஏற்படலாம். அப்போது எமது இலட்சியம் நிறைவேறும். இந்த நம்பிக்கையுடன் எமது விடுதலைப் போராட்டத்தை அரசியல் ராஜதந்திர பாதையில் நாம் முன்னெடுப்போம்.

**நீங்கள் வற்புறுத்திய ஆயுத போராட்டத்தில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலான காலத்தில் நீங்கள் பல யுத்த வெற்றிகளை - பாரிய வெற்றிகளையும்கூட ஈட்டியிருந்தீர்கள். அதிசயிக்கத்தக்க பல நடவடிக்கைகளை சாதித்தீர்கள். வடக்கு கிழக்கு மாகாணத்தில் மிகப்பெருமளவு நிலப்பரப்பை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்து, அந்தப் பகுதியில் உங்களின் ஓர் ஆட்சியையுங்கூட நிர்வகித்தீர்கள். இலங்கையில் தமிழ் மக்களுடைய ஏக பிரதிநிதிகள் நீங்களே என்றும் பிரகடனம் செய்தீர்கள். ஆனால், இன்று இவை அனைத்தையும் நீங்கள் இழந்துவிட்டீர்கள்; தோற்றுவிட்டீர்கள். ஆக, இதன் பின்னர் மீண்டும் சாத்வீக - ஜனநாயக முறைகளில் நீங்கள் தொடர நினைப்பது எந்த விதத்தில் நியாயமானது; நம்பிக்கையூட்ட வல்லது?**

பத்: எம்முடைய மக்களுடன் இணைந்து எமது அடுத்தகட்ட போராட்டத்தைத் தொடர வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள எமது ஒருங்கிணைப்பாளர்கள், தாயகத்தில் களத்திலிருந்து அரச படைகளின் முற்றுகையை உடைத்து வெளியேவந்த சுமார் இரண்டாயிரம் போராளிகள், பொறுப்

பாளர்கள் போன்றோரின் தீர்க்கமான ஆலோச னைகளுடனேயே நாம் இம் முடிவை எடுத் தோம்.

**சுமார் இரண்டாயிரம் போராளிகள் வெளி யேறி, தப்பித்திருப்பதாக நீங்கள் கூறுவது, அந்த தகவலை நீங்கள் அரசுக்கு தெரிவிப்ப தாக அமையாதா?**

பத்: அரசாங்கத்துக்கு அது ஏற்கனவே தெரி யும்.

**'நாடுகடந்த தமிழீழ அரசு' ஒன்றை நிறுவ முயற்சிப்பதன் நோக்கம் என்ன?**

பத்: தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழ ரின் தன்னாட்சி உரிமை என்ற கோட்பாடுக ளின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் நிரந் தரமான ஓர் அரசியல் தீர்வு எம் முன்னால் உள்ள பாரிய பொறுப்பு. இதனை இலங்கை யில், இலங்கையின் அரசரமைப்பில் சாதித்துவி டக்கூடிய எந்த சமிக்ஞையும் இப்போதைய நிலைமைகளில் தென்படவில்லை. எனவே, சர் வதேச விதிமுறைகளுக்கும் நடைமுறைகளுக் கும் அமைவான விதத்தில், இலங்கைக்கு வெளி யேதான் தமிழர்கள் தமது உரிமைகளை நிலை நிறுத்துவதற்கான செயல்பாடுகளில் தீவிரம் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

**இலங்கையில் உங்களுக்காக செயல்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்புகூட இதனை எதிர்க்கிறதே?**

பத்: அது அவர்கள் எடுத்த முடிவு. அங் குள்ள நிலைமைகளுக்கு ஏற்ப அவர்கள் செயல் படுவதில் எமக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை.

**இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமி டையேயான சுமுகமற்ற உறவு, இன்று ஏற் பட்ட நிலைமைகளுக்கான முக்கிய காரணம் என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மை. இதில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

பத்: இது சற்று கசப்பான உண்மைதான். கடந்த காலத்தில் இதில் தவறுகள் இருந்தாலும் அதனை மீறி இந்தியா எமக்கு அநுசரணையாக இருக்கும் என்று நாம் நிச்சயமாக நம்புகிறோம். இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியா அதன் நலனைப் பேணுவதில் நாம் தடையாக இருக்க மாட்டோம். ஏற்பட்டுள்ள புதிய சூழலில் ஒரு புதிய உறவு மலர்ந்து, இந்தியாவுக்குள்ள பெரும் பொறுப்புடன் இந்தியா எமக்கு துணையாக இருக்கும் என்றே நாம் நிச்சயமாக நம்புகிறோம். அந்த விதத்தில் நாமும் செயல்படுவோம். 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட வேளைகளில் எமது தலைவர் பிரபாகரன், 'இந்திய அரசின் கைகளில் எமது பாதுகாப்பை ஒப்படைக்கிறோம்' என்று சுதும லையில் ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார். இந்தியாவுடனான உறவில் எமக்கு ஒரு புதிய பார்வை வேண்டும். அந்த உறவு பலமடைய வேண்டும்.

**பிரபாகரன் இன்னமும் உயிருடனேயே இருப்ப தாக தமிழ்நாட்டில் பழ. நெடுமாறன் கூறிவரு கிறாரே...? உங்கள் நியமனத்தைக்கூட அவர் ஏற்றுக்கொள்வதாக தெரியவில்லையே?**



பத்: தலைவரின் மறைவை ஏற்றுக்கொள் வது அவருக்கு கடினமாக இருக்கிறது. எத் துணை கசப்பானதெனினும் நடைமுறை உண் மைகளை எப்படியும் ஏற்றுக்கொண்டுதானே ஆகவேண்டும். தமிழ்நாட்டில் எமக்கு ஆதர வாக இருக்கும் மிகப்பெரிய நேசசக்தி அவர். இப்பொழுது சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட் டாலும் எம்முடன் தொடர்ந்து செயல்படவல்ல ஒருவரே அவர்.

**பிரபாகரன் மறைந்துவிட்டதாக தெரிவிக்கப் படுகையில் அவருக்கான ஓர் அஞ்சலி ஏன் இல்லாமல்போகிறது?**

பத்: விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இத்தகைய ஒரு நிலைமை சிலசமயங்களில் தவிர்க்கவியலாததாக ஆகிவிடுகிறது. இந்த ஆண்டு மாவீரர் வாரம் (நவம்பர் 21 - 27), மாவீரர் தினம் (நவம்பர் 27), தலைவர் பிரபாகரனின் பிறந் ததினம் (நவம்பர் 26) என்பன தலைவர் பிர பாகரனுக்கும் மற்றைய மூத்த தளபதிகளுக்கு மான மிகப்பெரும் அஞ்சலி நிகழ்வுகளாக புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் நிகழ்த்தப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**தலைவரின் மறைவை ஏற்றுக்கொள்வது பழ. நெடுமாறனுக்கு கடினமாக இருக்கிறது. எத்துணை கசப்பானதெனினும் நடைமுறை உண்மைகளை எப்படியும் ஏற்கத்தானே வேண்டும்**

**முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் மீதான இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களில், விடுதலைப் புலிகள் பொதுமக்களை அங்கி ருந்து தப்பிச்செல்லவிடாது தடுத்து, மனித கேடயங்களாக பாவித்தனர் என்ற குற்றச்சாட் டுக்கு நீங்கள் ஏதாவது பதில் அளிப்பீர்களா?**

பத்: முல்லைத்தீவில் கடைசிவரை இருந்தவர் கள் பெரும்பாலோர் போராளிகளின் குடும்பத் தவர்களாக அல்லது அவர்களது உறவினர்க ளாக இருந்தார்கள். அத்துடன், இலங்கை இரா ணுவம் தமக்கு பாதுகாப்பளிக்கும் என்ற நம்பிக் கையற்றவர்களாக, முகாம்களில் சித்திரவ தையை எதிர்கொள்ளும் அச்சம்கொண்டவர் களாகவும் இருந்தார்கள். அரசாங்கம் வைத்திய உதவிகளை நிறுத்தியபோது நாமே பெருமளவு பொதுமக்களை அனுப்பிவைத்தோம். இதுத விர, நாம் அவர்களை தடுக்கவில்லை; எம்மு டன் வைத்திருக்கவுமில்லை. ■



பயங்கரவாதத்தை, அதிலும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை முழுமூச்சுடன் எதிர்ப்பதாக சொல்லிக்கொள்ளும் அமெரிக்கா, பாகிஸ்தான் விடயத்தில் வித்தியாசமான நிலைப்பாடு எடுப்பதற்கு காரணம் இருக்கிறது

நடப்பு விவகாரம் | இந்தியா

# பாகிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்க தலையீடு?

## கூட்டறிக்கை ஏற்படுத்தியுள்ள சர்ச்சை

தனஞ்செயன்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அறிவிக்கப்படாத போர் பல முனைகளில் நடந்துகொண்டிருந்தாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கும். கார்கில் போர்போன்ற ஏதாவது பெரிய பிரச்னை ஏற்படும்போது மட்டும் பேச்சுவார்த்தைகள் முடங்கும். கடந்த ஆண்டு மும்பையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர் இதே போன்ற முடக்கம் ஏற்பட்டது. அது சமீபத்தில் நெகிழ்ந்தது. கடந்த ஜூலை மாதம் 16, 17 தேதிகளில் இரு நாடுகளின் பிரதமர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் முடிந்து, இரு நாடுகளின் சார்பிலும் பொதுவான 'கூட்டறிக்கை' ஒன்று வெளியிடப்பட்டது. இதுதான் இப்போது இந்தியாவில் பெரும் புயலைக் கிளப்பியிருக்கிறது. "தன் மண்ணிலிருந்து முளைக்கும் பயங்கரவாதச் செயல்களைப் பாகிஸ்தான் தடுத்து நிறுத்தினால்தான் பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ளதாக இருக்கும்" என்பதுதான் கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவின் நிலைப்பாடாக இருந்துவருகிறது. ஆனால், கடந்த மாதம் 17ஆம் தேதி அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் 'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையாக இருக்கத் தேவையில்லை' என்ற வாசகம் இருக்கிறது. இதுதான் புயலைக் கிளப்பியிருக்கிறது.

அது மட்டுமன்றி, பாகிஸ்தானில் கடந்த சில வருடங்களாக பலுசிஸ்தானில் அமைதியற்ற சூழ்நிலை நிலவிவருகிறது. இதற்குக் காரணம், இந்திய உளவுத்துறையான 'றோ' என்று பாகிஸ்தான் கூறிவந்திருக்கிறது. இந்தக் கூட்டறிக்கையில் 'பலுசிஸ்தான் நிலைமை பற்றி பாகிஸ்தான் பிரதமர் கவலை தெரிவித்தார்' என்றும் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இது, பாகிஸ்தான் இந்தியாமீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கு நம்பகத்தன்மை சேர்ப்பதாக இருக்கிறது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்திய - பாகிஸ்தான் உறவு என்பது பங்காளிகளின் உறவுபோல, விட்டுக் கொடுத்தல், நல்ல உறவு போன்றவை ஒருபோதும் ஏற்பட முடியாததாகத்தான் இருந்துவருகிறது. போட்டி, பொறாமை, அடுத்தவரை விஞ்ச நினைப்பது ஆகியவை இதன் ஆதார கருதிகள். இதனால் பிரச்னை வளர்ந்து கொண்டுபோகும் என்பதோடு, கஷ்டமும் தீராது. இதுதான் கடந்த அறுபது வருடங்களாக நடந்துவருகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இதுவரை மூன்று போர்களும் எல்லை தாண்டாத யுத்தம் ஒன்றும் நடந்திருக்கிறது. எல்லாமே பாகிஸ்தான் துவக்கியவைதான். இவற்றில் தோல்வியும் பாகிஸ்தானுக்கே. அதேசமயத்தில், மத வெறியைப் பயன்படுத்திக்கொண்டு, தவறான முறையில் இஸ்லாத்தை அடையாளம் காட்டி, அதன்மூலம் தனது நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள பல முஸ்லிம்களுக்கு வெறியேற்றி, பல சதிச்செயல்களை பாகிஸ்தான் நிறைவேற்றிவருகிறது.



**'பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையாக இருக்கத்தேவையில்லை'**



**இருபது நாள்களில் இரண்டாவது தடவையாக இந்தியாவந்த ஹிலறி கிளின்டன், பிரதமரை மரியாதை நிமித்தம் சந்தித்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியை சந்தித்து வெகுநேரம் உரையாடினார்**

கடந்த 15 வருடங்களாக இந்தியாவில் நிகழ்ந்த நாசவேலைகள் பல. மும்பாய் குண்டுவெடிப்பு, கலவரம், மும்பை ரயில் குண்டு வெடிப்பு, டில்லி சாந்தினி சௌக் குண்டுவெடிப்பு, ஹைதராபாத்தில் குண்டுவெடிப்புகள், மசூதியில் குண்டுவெடிப்பு, அஹமதாபாத்தில் குண்டுவெடிப்பு, உள்ளூர் தீவிரவாதிகளைக்கொண்டு கோவையில் தொடர் குண்டுவெடிப்பு, சென்னை குண்டு வெடிப்பு என, பலவற்றை அடுக்கலாம். இவற்றைப் பாகிஸ்தான் செய்தது என்று சொல்ல முடியாவிட்டாலும், பாகிஸ்தானில் உள்ள சக்திகளின் துணையோடு இவை செய்யப்பட்டவை என்பதற்கான ஆதாரங்களை இந்திய அரசு முன்வைக்கிறது.

இவற்றைத் தவிர, காஷ்மீரத்தில் அன்றாட ஊடுருவல், சதிவேலை, சுற்றுலாத் துறையை ஸ்தம்பிக்க வைத்தல், உள்ளூர் இளைஞர்களைக் கடத்திச் சென்று தூண்டிவிட்டு, தீவிரவாதிகள் ஆக்குதல் என்று, முடிவில்லாத முறையில் பாகிஸ்தான், தன்னாலான அனைத்து தொந்தரவுகளையும் கொடுத்துவருகிறது என்று இந்திய அரசும் இந்தியாவின் பிரதான கட்சிகளும் அழுத்தமாகக் குற்றம்சாட்டிவருகின்றன.

இது போன்ற செயல்களில் 20 சதவிகிதம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? கண்டிப்பாகப் போர் மூண்டிருக்கும். ஆனால், இந்தியா அந்த முயற்சியில் இறங்கவில்லை. இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடரவேண்டுமென்று மேற்படி நாடுகள் இந்தியாவை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

பயங்கரவாதத்தை, அதிலும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை முழு மூச்சுடன் எதிர்ப்பதாகச் சொல்லிக்கொள்ளும் அமெரிக்கா, பாகிஸ்தான் விடயத்தில் வித்தியாசமான நிலைப்பாடு எடுப்பதற்குக் காரணம் இருக்கிறது. பாகிஸ்தான், பூகோள ரீதியில் மிக முக்கியமான இடத்திலிருக்கிறது. இங்கே தங்களது இருப்பு, அதிகாரம், ஆதிக்கம் ஆகியன அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவை. ஆகவே, பாகிஸ்தானிலிருந்து முளைவிடும் பயங்கரவாதச் செயல்களைத் தங்களது வழக்கமான தீவிரத்துடன் கண்டிக்காமல் 'சமாதான முயற்சி' என்னும் அறிவுரையை இவை வழங்குகின்றன.

இந்தியா 13 கோடி முஸ்லிம்களைக் கொண்டிருக்கும் நாடு. புள்ளிவிவரப்படி, உலகிலேயே அதிக எண்ணிக்கையில் முஸ்லிம் மக்கள் வசிப்பது இந்தியாவில்தான். எனவே, முஸ்லிம்களைப் பொது எதிரியாகக் கருதி விஷயத்தை அணுகமுடியாது. அதுமட்டுமன்றி, கடந்த 50 ஆண்டுகளாக காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்காமல் இருப்பதும் இந்தியாவின் நிலையைப் பலவீனப்படுத்துகிறது. ஆனால், இத்தகைய நிலவரம் ஆளும் சக்திகளுக்கு ஒருவிதத்தில் நல்லதுதான். பிரபல அரசியல் ஆசான் மாக்கியவல்லியின் முக்கிய போதனையைக் கேளுங்கள்: “வெளிநாட்டிலிருந்து வரும் அச்சுறுத்தல் மக்களை எப்போதும் ஒருவிதமான கோபத்திலும் பதற்றத்திலும் வைத்திருக்கும். இந்த மனநிலை நாட்டை ஆள்பவர்களுக்குச் சாதகமான அம்சம். ஏனெனில், அவர்கள் செய்யும் தவறுகள், மீறல்கள், திறமையின்மை ஆகியவை இந்த ‘அச்சுறுத்தலுக்கு’ முன்னால், அவ்வளவு பெரிய விஷயம் அல்ல என்ற முடிவுக்கு மக்கள் வருவார்கள். இதனால் உள்நாட்டுப் பிரச்னைகள் கட்டுக்குள் அடங்கியிருக்கும்”. இதைத்தான் இந்தியாவின் மாபெரும் கட்சியும், 50 ஆண்டுகளுக்குமேல் நாட்டை ஆண்டுவரும் கட்சியுமான காங்கிரஸ் செயல்படுத்திவருகிறது என்று குற்றம் சுமத்தக்கூடிய நிலை உள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் என்பது ‘பாவனைகளாகவே’ இருக்கமுடியும். பாகிஸ்தானின் உளவுத்துறையைத் தமது கட்டுக்குள் வைத்திருக்கும் மத தீவிரவாதிகளும் இராணுவமும் மனது வைக்காமல் மாற்றம் வரப்போவதில்லை. என்றாலும், பேச்சுவார்த்தைகள் அவ்வப்போது தடுமாறினாலும் ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

இதுவரையில் நடந்த அல்லது நடத்தப்பட்ட முயற்சிகள் அனைத்தும், இந்தியாவால் ஆரம்பிக்கப்பட்டவைதான். அப்படிப்பட்ட முயற்சிகளிலொன்றுதான் கடந்த மாதம் நடந்த பேச்சுவார்த்தை. இதற்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க.) கடுமையாக விமர்சிக்கிறது. பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்னும் நிலையில், பிற விஷயங்களைப் பற்றிய பேச்சுவார்த்தை அர்த்தமற்றது என்கிறது பா.ஜ.க. இந்நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் கையெழுத்திட்ட அறிக்கையில் மேற்படி விடயம் விட்டுக்கொடுக்கப்பட்டிருப்பதுபற்றி அது குறை கூறுகிறது.

காங்கிரஸ் கட்சியும் இதை விமர்சிப்பதுதான் இதில் எதிர்பாராத திருப்பம். “இந்திய நிலையில் மாற்றமில்லை; பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும் வரை எந்த விடயத்தைப்பற்றியும் பேச்சு இல்லை” என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா ‘திட்டவட்டமாக’ கூறியிருக்கிறார். ஆனால், பயங்கரவாதத்தையும் பேச்சுவார்த்தையையும் பிரித்துப் பார்க்க விழையும் கூட்டறிக்கை, அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கைக்கு எதிராக இருக்கிறது. இது காங்கிரஸ் கட்சியைச் சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்தக் கூட்டறிக்கைக்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எழுந்த எதிர்ப்பைப் பார்த்த காங்கிரஸ், தனது செயலை நியாயப்படுத்த, விளக்கம்கூற, பலரைக் களத்தில் இறக்கியது. நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் வெளியுறவுத்துறை செயலர் சிவசங்கர் மேனன் ஆகியோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். சிவசங்கர் மேனன் குறிப்பிட்டிருக்கும் விடயம் கவனிக்கத்தக்கது. “அறிக்கையில் தவறு இல்லை, ஆனால், அதைக் கூறுவதற்கு பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகள்தாம் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறது” என்று அவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறான அறிக்கைகளில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமானவை என்பதை தெரியாதவர்கள் அல்லர் இந்திய அதிகாரிகள். அதேபோல, ஐம்பது வருட காலம் அதிகார அரசியலில் இருந்துவரும் காங்கிரசும் இத்தகைய விடயங்களில் ‘தவறி’ நடந்துகொள்ளும் என்று கூறினால் யாரும் நம்பமாட்டார்கள். அப்படியானால், எதனால் இப்படிப்பட்ட வார்த்தைகள் அறிக்கையில் இடம் பெற வேண்டும்?

அணிசேரா மாநாட்டுக்கு பிரதமர் மன்மோகன்சிங் புறப்படுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு, பிரதமர் மற்றும் முக்கியஸ்தர்களை, அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்டன் சந்தித்துப் பேசினார். பேச்சுவார்த்தையின் விவரங்கள் பத்திரிகைகளில் கூட மேம்போக்காகத்தான் வெளியாகின. அந்த சந்திப்பின்போது என்ன நடந்தது என்ற விவரம் யாருக்கும் தெரியாது.

அதேபோல, நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியதும், பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க. அதை முன்னின்று நடாத்தியதும் அனைவரும் அறிவார்கள். பிரதமர் மன்மோகன் சிங், பா.ஜ.க.வின் தீவிரத்தைக் குறைக்க முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை மிகவும் பாராட்டிப் பேசினார். “நாம் சண்டபோட்டு பாகிஸ்தானை ஒரேயடியாக அழித்துவிடுவது தீர்வாக ஆகுமா? அது முடியக்கூடிய காரியம்தானா?” என்று, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கேள்வி எழுப்பினார். இவை நடந்துகொண்டிருக்கும்போது, ஹிலறி கிளின்டன், 20 நாள்களில் இரண்டாவது தடவையாக இந்தியா வந்தார். இம்முறை பிரதமரை மரியாதை நிமித்தம் சந்தித்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவரான எல்.கே. அத்வானியை சந்தித்து வெகுநேரம் உரையாடினார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, இந்தியாவின் புதிய நிலைப்பாட்டுக்குப் பின்னால் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க ‘அறிவுறுத்தல்கள்’ இருக்கலாம் என்று நம்புவதற்கு அனைத்து சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. தனக்குப் பெரும்பான்மை இருப்பதால் எதிர்க் கட்சிகள் என்னதான் ‘கத்தினாலும்’ ஆட்சிக்கு ஆபத்தில்லை என்பதைப் புரிந்துகொண்டே இந்த அரசியல் விளையாட்டில் காங்கிரஸ் இறங்கியிருப்பதாக தோன்றுகிறது.

இந்தக் கூட்டறிக்கையை இப்போது காங்கிரஸே கிட்டத்தட்ட நிராகரித்துவிட்டது. உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், மும்பை தாக்குதல் குறித்து பாகிஸ்தானில் உள்ளவர்களுக்கு உள்ள தொடர்புகள் குறித்துப் பாகிஸ்தானுக்கு ஏராளமான தகவல்களை அளித்தும் அந்நாடு செயல்படாமல் இருக்கிறது என்று காட்டமாகக் கூறியிருக்கிறார். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மன்மோகன் சிங்கின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தினாலும் அவரும் பயங்கரவாதத்தை ஒடுக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தால்தான் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாக அமையும் என்பதை தெளிவுபடுத்திவிட்டார். எனவே, நடைமுறையில் இந்தக் கூட்டறிக்கைக்கு என்ன மரியாதை இருக்கும் என்பது சந்தேகத்துக்கிடமானதுதான். ஆனால், இதற்குப் பின்னால் இருக்கும் சக்திகள் எவை என்பதுதான் இப்போது பதில் தெரியாத, முக்கியமான கேள்வி. ■


Nalli
NALLI CHINNASAMY CHETTY
9 Nageswaran Road
T. Nagar, Chennai - 600 017
Tel: 24344115/42604567
Email: inquiry@nalli.com Web: www.nalli.com



ஆங் சான் சூ கிய்


சமாதானத்துக்கான
நோபல் பரிசை வழங்கிவிட்டு
சமாதானமடையும்
மேலை நாடுகள்

உலக விவகாரம் | மியன்மார்


# இராணுவ ஆட்சி விடுபடுமா?

## சர்வதேச நாடுகள் அக்கறைகொள்ளாததன் காரணம் என்ன?

கிரீஷ்வர்




**இராணுவ ஆட்சி தொடர்வதால்
சீனாபோன்ற மிகப்பெரிய நாடுகளுக்கு
மிகப்பெரும் லாபம் கிட்டுகிறது**



உலகின் பழமையான நாடுகளில் ஒன்று என்று மியன்மார் என்கிற பர்மாவைக் கூறலாம். இந்த நாட்டின் சரித்திரம் கி.மு. 900இலிருந்து தொடங்குகிறது. 'பர்மன்' என்கிற மொழியைப் பேசுபவர்களாக இந்த மக்கள் இருந்தனர். திபெத் போன்ற பகுதிகளிலிருந்து குடியேறிய 16 இனங்களைச் சேர்ந்த மன்னர் குடும்பங்கள், அவரவர்களுக்கென்று ஒவ்வொரு பகுதியை வரையறுத்துக்கொண்டு, அதே சமயத்தில் ஏறக்குறைய ஒரே விதமான கலாசார அடையாளங்களுடன் இருந்தனர். பௌத்தம் இந்நாட்டில் பெரும்பாலோரின் மதமாக இன்றளவும் இருந்துவருகிறது.

இந்த நாடு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து 80 சதவிகித காலப்பகுதி இராணுவ ஆட்சியில்தான் இருந்துவருகிறது. அதேசமயம், உலகில் இராணுவ ஆட்சி நிலவும் சில ஆபிரிக்க, மற்றும் ஆசிய நாடுகளைப்போல, சர்வதேச அளவில் பெரும் கவனத்தை இந்நாடு இதுவரையில் பெறவில்லை. இத்தனைக்கும் இந் நாட்டில் இராணுவ ஆட்சியை எதிர்த்து தொடர் போராட்டங்களை அந்நாட்டு எதிர்க் கட்சிகளும் மாணவர்களும் தொடர்ந்து நடத்தியே வருகிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் மூர்க்கத்தனமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும், வழக்கமாக சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றுக்குக் குரல்கொடுக்கும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் இதைப்பற்றிக் கண்டுகொள்ளாமலேதான் இருந்துவருகின்றன.

மியன்மாரின் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சான் சூ கிய், ஏறக்குறைய 18 வருடங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். நாட்டில் கடைசியாக நடந்த முறையான தேர்தலில் (1990) இவரது கட்சியான ஜனநாயக தேசிய லீக் (*National League for Democracy* - என்.எல்.டி.) மொத்தமுள்ள 489 இடங்களில் 392 இடங்களில் வெற்றிபெற்றது. ஆனால், இந்த தேர்தலை நடாத்திய இராணுவ ஆட்சி, மக்களின் தீர்ப்பை ஏற்க மறுத்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய ஆங் சான் சூ கிய் கைதுசெய்யப்பட்டார். இதற்கு எதிரான கூச்சல்கள் உலகெங்கும் எழுந்தாலும், அனைத்தும் வெகுவிரைவில் அடங்கிப்போய், பயனற்ற வெற்றுக் கூச்சல்களாக தேங்கிவிட்டன.

மேற்கத்திய நாடுகள் தங்களது மனசாட்சியைச் சமாதானப்படுத்திக்கொள்ளும் விதத்தில், 1991ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசை ஆங் சான் சூ கிய்க்கு வழங்கியதுடன் 'கடமை' முடிந்ததென்ற திருப்தியுடன் மியன்மாரை மறந்துவிட்டன. இந்நாட்டில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் உலக நாடுகள் காலம்தாழ்த்திவருகின்றன. என்னதான் செய்தாலும் மேற்கத்திய சிந்தனைமுறைகொண்ட அல்லது மேற்கு உலகுக்குப் பயன்படக்கூடிய நாடாக மியன்மாரை மாற்றமுடியாது என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் நம்புவதும் இந்த அலட்சியப் போக்குக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் நம்ப இடம் இருக்கிறது.

மியன்மாரின் பூகோள, கலாசார ரீதியான காரணங்கள் அந் நாட்டை உலக நாடுகளின் தலையீட்டிலிருந்து பாதுகாத்துவருகின்றன என்று சொல்லலாம். பர்மாவின் வடகிழக்கு எல்லை முழுவதும் சீனாவும் மேற்குப் பகுதியில் இந்தியாவும் கிழக்கில் தாய்லாந்தும் தென்பகுதி முழுவதும் அந்த

மான் பகுதியிலுள்ள கடலும் வங்கக் கடலும் எல்லைகளாக இருக்கின்றன. பர்மாவின் எல்லையின் மூன்றில் ஒரு பகுதி அதாவது,1930 கி.மீ தூரம், தொடர் கடற்கரையால் சூழப்பட்டிருக்கிறது.

கலாசார ரீதியல், மியன்மாரில் 89 வீத மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். கிறிஸ்தவர்கள் 4 வீதம், மற்றையவர்கள் 3 வீதம். இனங்களை எடுத்துக்கொண்டால், ஆரம்பத்தில் 16 தனித்தனி இனங்களாக இருந்த நிலை பல்வேறு காரணங்களால் மாறின. தற்போது பர்மியர்கள் 69வீதம்; சின் இனத்தவர் 9வீதம்; கசின் இனத்தவர் 7 வீதம்; ராகின் 4 வீதம் (இவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள்) என்று இருக்கிறார்கள். இவர்களைத் தவிர, படையெடுப்புகள் மூலம் வந்துசேர்ந்த சீனர்கள் (3 வீதம்), மங்கோலியர் (2 வீதம்) ஆகியோரும் இருக்கின்றனர். பிழைப்புக்காக வந்துசேர்ந்த இந்தியர்கள் 2 வீதம்; அத்துடன், ஏனைய உதிரி இனங்கள் 5 வீதம் என்கிற ரீதியில் மக்கள் தொகை உள்ளது.

அரசியல் ரீதியில் பார்த்தால், இராணுவம்தான் அனைத்தையும் தீர்மானிக்கிற சக்தியாக இருந்துவருகிறது. ஆரம்பத்தில் அதாவது பிரிட்டிஷ்காரர்கள் பர்மாவை தங்களது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த 1896இலிருந்து 1937வரை, இதனை இந்திய பகுதியாகவே இணைத்து ஆட்சியும் செய்துவந்தனர். மேற்குப் பகுதியில் உள்ள இன்றைய எல்லைப் பகுதியான இந்தியாவில் இருக்கும் மிசோரம், நாகாலாந்து மற்றும் அருணாசலப் பிரேதேசம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களின் கலாசாரத்தோடு மியன்மாரின் கலாசாரம் மிகவும் ஒத்துப்போனமைதான் இதற்குக் காரணம். இந்தியாவில் தோன்றிய பௌத்த மதத்தை முழுவதுமாகப் பின்பற்றிவரும் திபெத்தின் ஆதி குடிமக்களே முதன் முதலாக பர்மா பகுதியில் குடியேறினர் என்பது வரலாறு.

1948 அக்டோபர் 4ஆம் தேதி, பர்மா என்கிற மியன்மாருக்கு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது. முதலாவது பிரதமராக யு நு ஜனநாயக முறையில் தெரிவானார்.

மியன்மாரின் மக்கள் விஷயம் தெரியாத பாமரர்கள் அல்லர். இன்று அந்நாட்டில் 89.9வீதம் பேர் கல்வியறிவு உள்ளவர்கள். ஆனாலும், 1960களின் தொடக்கத்தில் ஆட்சியைத் தன் கையில் எடுத்துக்கொள்வதற்கான முயற்சிகளை ஆரம்பித்த இராணுவம் 1962இல் வெற்றிபெற்றது. இதற்கு ஒரு வருடத்துக்கு முன்னர், 1961இல், ஐ.நா.வின் பொதுச் செயலாளராக பர்மாவைச் சேர்ந்த யு தாண்ட் பதவியேற்றுக் கொண்டார். அடுத்த பத்து ஆண்டுகள் அவர் அந்தப் பதவியில் இருந்தார். அவரது இளம் உதவியாளராக பணியாற்றியவர்தான் ஆங் சான் சூ கிய்.

மியன்மாரின் இராணுவப் புரட்சி அப்போதைய சோவியத் ரஷ்யாவின் 'ஆசி'யுடன் நடந்தது. ஆட்சிக்குவந்த ஜெனரல் ந்யூ வின், 26 ஆண்டுகள் ஆட்சிசெய்தார். தனக்கு ஆதரவும் நம்பிக்கையும் அளித்த சோவியத்தின் ஆட்சிமுறையை, அதாவது சோஷலிசத்தை, மியன்மாரில் அமுல்படுத்தினார். அதன்படி, நாட்டின் தொழில், தகவல், உற்பத்தி ஆகியவை தேசியமயமாக்கப்பட்டன. அதேசமயத்தில், நாட்டின் பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் பௌத்த மதத்தின் நம்பிக்கைகளையும் அரசு அங்கீகரித்து நடைமுறைச் சட்டங்களாகக் கொண்டுவந்தது.

ஆனால், மார்க்சியமும் மதமும் சேர்ந்த இந்தக் கலவை, அதன் உள்ளார்ந்த முரண்பாடுகள் காரணமாக நாட்டை ஆட்டம் காணவைத்தது. இராணுவ ஆட்சியை எதிர்த்து மாணவர்கள், மற்றும் எதிர்க் கட்சியினரின் போராட்டங்களும் தொடர்ந்து நடந்துவந்தன. இராணுவம் அனைத்தையும் மிகக் கடுமையான நடவடிக்கைகள்மூலம் அடக்கியது. பின்னர், இராணுவம் சோவியத் பாணியிலான ஒரு கட்சி அரசியல் முறையைக் கொண்டுவந்தது. அதன் அடிப்படையில் பர்மிய சோஷலிச செயல்திட்ட கட்சி 'தோற்றுவிக்கப்பட்டு' 1974இல் 'தேர்தல்' நடைபெற்றது. வெற்றிபெற்றவர்கள் ஆட்சியும் நடத்தினர். ஆட்சி முறையிலும் கொள்கையிலும் இராணுவ ஆட்சிக்கும் இதற்கும் எள்முனையளவு வித்தியாசம்கூட இருக்கவில்லை.

இராணுவ ஆட்சி ஏற்பட்ட காலத்தில், அதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக இனக் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. இராணுவ ஆட்சியின் தலைவர் ஜெனரல் ந்யூ வின், அங்கே செல்வாக்குடனும் செல்வத்துடனும் இருந்த இந்தியர்களைக் குறிவைத்தார். அப்போது நான்கு கோடியாக இருந்த மியன்மார் மக்கள்தொகையில் சிறுபான்மையினராக இருந்தவர்கள் இந்தியர்கள். அப்போது பெரும் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன. கிட்டத் தட்ட 30 லட்சம் இந்தியர்கள் தப்பிப்பிழைத்து இந்தியாவுக்கு திரும்பினர். இது நடந்தது 1962இல். அடுத்ததாக 1978இல் ரொஹிங்கியா இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் குறிவைக்கப்பட்டனர். அப்போது 20 லட்சம் பர்மிய முஸ்லிம்கள், பங்களாதேஷில் தஞ்சம் புகுந்தனர்.

இவை நடந்த காலகட்டங்களிலும், இவற்றுக்குப் பின்னரும் இராணுவ ஆட்சியில் பொருளாதார சீரழிவு, அரசியல் ரீதியாக யாரையும் செயல்படவிடாத நிலை போன்றவற்றை எதிர்த்து 1988இல் நாடு தழுவிய அளவில் மிகப்பெரும் கலவரம் வெடித்தது. இதையும் வழக்கம்போல் இராணுவம் மிகக் கடுமையான முறையில் அடக்கியது. பல்லாயிரக்கணக்கானவர்கள் இதில் கொல்லப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் ஜெனரல் சோ மொங் ஆட்சியைப் பிடித்தார். ஆட்சிக்கு வந்ததும் மற்றையவர்களைக் காட்டினும் தான் மாறுபட்டவர் என்பதைக் காட்டவும், இராணுவ ஆட்சியாலும் நியாயமாக நடந்துகொள்ள முடியும் என்று வெளி உலகத்துக்குக் காட்டவுமாக தேர்தல்களை அறிவித்தார்.

முப்பது வருடங்களுக்குப் பின்னர், 1990 மே மாதம் மக்கள் சபைக்கான தேர்தல்கள் நடைபெற்றன. இதில் ஆங் சான் சூ கிய்யின் கட்சியான ஜனநாயக தேசிய லீக் (என்.எல்.டி) போட்டியிட்டது. மொத்த இடங்கள் 489. இதில் என்.எல்.டி அறுதிப் பெரும்பான்மைக்கும் அதிகமாக 392 இடங்களில் வெற்றிபெற்றது. இதனைச் சற்றும் எதிர்பார்க்காத, இராணுவ ஆட்சி உருவாக்கிய அரசியல் அமைப்பான எஸ்.எல்.ஓ.ஆர்.சி. (*State Law and Order Restoration Council*) இந்த முடிவை ஏற்க மறுத்தது. ஆட்சியை கையளிக்கமுடியாது என்று அறிவித்து, 'தேசிய சமாதான அபிவிருத்தி கவுன்சில்' - எஸ்பிடிசி. (*State Peace and Development Council*) என்ற புதிய பெயரில் இராணுவம் ஆட்சியை தொடர்ந்தது.

இதற்கிடையில் உலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், இங்கு நடக்கும் அநியாயங்களை அரைகுறை ஈடுபாட்டுடன் கேள்விக்கு உள்படுத்த ஆரம்பித்தன. மியன்மாரை தங்களது கட்டுக்குள், அல்லது தாக்கத்துக்குள் கொண்டுவரமுடியாது என்று இந் நாடுகள் நம்பின. அப்படி கட்டுப்பாட்டினுள் வந்தாலும் இதனால் பெரும் லாபம் ஏற்படும் என்றும் கூறமுடியாது. ஏனெனில், மியன்மாரின் வர்த்தக உறவுகள் ஏற்கனவே அதனைச் சுற்றியுள்ள நாடுகளுடன் ஏறக்குறைய முழுமை பெற்றுவிட்டன. தாய்லாந்துடன் 40 வீதம்; இந்தியா போன்ற நாடுகளுடன் 11 வீதம்; சிங்கப்பூர் 13 வீதம்; சீனாவுடன் 7.5 வீதம் என்கிற ரீதியில் மியன்மாரின் வர்த்தக உறவுகள் இருக்கின்றன. 1999இலிருந்து தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பில் மியன்மார் சேர்த்துக்கொள்ளப்பட்டது.



**உலகில் இராணுவ ஆட்சி நிலவும் சில ஆபிரிக்க, ஆசிய நாடுகளைப்போல, சர்வதேச அளவில் பெரும் கவனத்தை இந்நாடு இதுவரையில் பெறவில்லை. இத்தனைக்கும், இராணுவ ஆட்சியை எதிர்த்து தொடர் போராட்டங்களை இந்நாட்டு எதிர்க்கட்சிகளும் மாணவர்களும் தொடர்ந்து நடத்தியேவருகிறார்கள்**

இதற்கிடையில் இராணுவம் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. 1993இல் இதற்கான முதல் மாநாடு கூட்டப்பட்டது. எனினும், எந்தப் பலனும் இதில் ஏற்படவில்லை. 1996இல் மறுபடியும் கூடிய மாநாட்டில் என்.எல்.டி. பங்குபற்றாததால் எதுவும் செய்ய இயலவில்லை. 2004இல் இத்தகைய 'ஜனநாயக' கட்சிகள் அழைக்கப்படவேயில்லை. ஆனாலும், அதிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. 2007இல் கூடிய மாநாட்டில் 54 பேரைக் கொண்ட அரசியல் அமைப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பின்னர், 2008ஆம் ஆண்டு இக்குழுவின் பணி முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதற்கான மக்களின் ஒப்புதலைப்பெற அரசு முடிவுசெய்து 2008 மே மாதம் இதற்கான கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அந்த சமயத்தில், அதுவரையில் மியன்மார் சந்தித்திராத மிகப்பெரும் சூறாவளி (நர்கிஸ்) தாக்கியபோது நாடே ஆட்டம் கண்டது. ஆனால், அந்த சூழ்நிலையிலும் 98 வீதம்பேர் வாக்களித்ததாக இராணுவம் அறிவித்தது. இதில், 92.5 வீதம்பேர் அரசுக்கு ஆதரவளித்தார்கள் என்று 'அதிகாரபூர்வமாக' அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு மக்கள் 'ஏகோபித்த' விதத்தில் ஒப்புக்கொண்ட விவரங்கள் என்ன தெரியுமா? இராணுவத்தை சிவில் தலைவர்கள் கட்டுப்படுத்த முடியாது; சட்ட சபைகளில் 25 வீதம் இராணுவத்தினருக்கு இட ஒதுக்கீடு; சிவில் நிர்வாகம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் ஆட்சி புரிந்தால், அதை நீக்க இராணுவத்துக்கு அதிகாரம் உண்டு.

இவற்றை ஐநா. உள்பட, வெளி உலகில் யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை. ஐநா.வின் சிறப்புத் தூதர் இப்ராஹிம் கம்பாரி எட்டு தடவைகள் இந்நாட்டுக்கு விஜயம் செய்தும் எந்தப் பயனுமே ஏற்படவில்லை. 2007இல் ஐநா. சபை மியன்மாருக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்தை, ரஷ்யாவும், சீனாவும் சேர்ந்து தங்களது 'தீர்மானத் தடை' (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்தி வலுவில்லாமல் செய்தன.

எது எப்படி நடந்தாலும், மியன்மாரை ஜனநாயகப் பாதைக்குத் திருப்புவதால் உலகத்தில் எந்த நாட்டுக்கும் எந்த விதத்திலும் லாபம் இல்லை. இராணுவ ஆட்சி தொடர்வதால், சீனாபோன்ற மிகப் பெரிய நாட்டுக்கு மிகப்பெரும் லாபம் கிட்டும். ரஷ்யா அரைகுறையாக இருந்தாலும், மார்க்சிய முறையை விசுவாசமாகப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த நாட்டை யாரும் தொந்தரவு செய்ய அனுமதிக்காது. பக்கத்தில் உள்ள, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, மியன்மாரின் இராணுவ ஆட்சிபற்றிக் கவலைப்பட்டு எதுவும் செய்யக்கூடிய நிலையில் எப்போதுமே இருந்ததில்லை என்பதுதான் பரிதாபமான உண்மை.

உலக நாடுகளில் எந்த நாடுமே உண்மையான மனதுடன் மியன்மாரில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்டிக்கத் தயாராக இல்லை. அப்படிப்பட்ட நிலை அண்மையில் வருங்காலத்தில் உருவாகும் என்பதற்கான அடையாளமும் இல்லை. ஆக, இப்போதைக்கு இராணுவ ஆட்சியிலிருந்து மியன்மாருக்கான விடுதலை என்பது இல்லை. ■

# முஸ்லிம் பிரச்னையை சமாளிக்கும் சாதுரியம்


அச்சுறுத்தலை உணர்ந்து, நடவடிக்கைகளில் அரசு தீவிரம் கொள்கிறது

டி. ஐ. ரவீந்திரன்

உலகை அச்சுறுத்திவரும் முக்கிய விஷயங்கள் என்று பார்த்தால் அவற்றில் முதன்மையானது 'பயங்கரவாதம். அதுவும், இஸ்லாத்தின் பெயரால் அரங்கேறும் பயங்கரவாதம் என்று கூறலாம். இது பெருமளவு பாதிக்காதவகையில் பார்த்துக்கொண்ட மிகச்சில நாடுகளில் மக்கள் சீனக் குடியரசும் ஒன்று. கம்யூனிஸ நாடான சீனா 'மதம் ஓர் அபின்' என்று கூறிவந்தாலும், முஸ்லிம்கள் இங்கு தங்களுக்கான உரிமைகளுடன் வாழ்ந்துவருகிறார்கள்.

சீனாவில் முஸ்லிம்களின் வருகை 7ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்கியது. சீனாவில் இஸ்லாம் அங்கீகாரம் பெற்ற ஒரு மதமாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. இங்கு வந்த முஸ்லிம்கள் எங்கிருந்தோ தப்பிவந்தவர்களோ அல்லது தஞ்சம் கோரியவர்களோ அல்லர். சாத் இபின் அபி வாக்கஸ், இஸ்லாத்தைத் தோற்றுவித்த முகமது நபியின் தாய்வழி மாமன். இவர், முகமது நபி உயிர்நீத்து 18 ஆண்டுகள் கழித்து, அப்போது துருக்கியை ஆண்ட மூன்றாம் காலிப் உத்மான் மன்னரால் சீனாவுக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

கி.பி. 650இல் சீனாவின் சக்ரவர்த்தி காசோங் காலத்தில் வாக்கஸ் தலைமை



ஞாபகார்த்த மசூதி



எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் உய்கர் முஸ்லிம்கள்

யிலான இந்த முஸ்லிம் குழுவினர் நல்லெண்ணத் தூதுவர்களாக வந்தனர். இவர்களை வரவேற்ற காசோங் மன்னரை இஸ்லாதுக்கு மாறவேண்டும் என்று தூதுவர் தலைவர் அழைப்பு விடுத்தார். இதை மன்னர் மறுத்தாலும், இஸ்லாம் மீதிருந்த மதிப்பை வெளிப்படுத்தும்விதமாக, சீனாவின் முதல் மசூதியை மிகப்பெரிய அளவில் கட்டினார். சீனாவில் உள்ள கன்ரன் என்ற இடத்தில் கட்டப்பட்ட அந்த மசூதி, 14 நூற்றாண்டுகள் ஆகியும், இன்றும் 'ஞாபகார்த்த மசூதி' என்ற பெயருடன் விளங்குவது குறிப்பிடத்த குந்தது.

பின்னர் இஸ்லாமியர்கள் கணிசமான எண்ணிக்கையில் சீனாவுக்கு வந்தனர். அவர்களில் பலர் கன்ரன் பகுதியிலேயே குடியேறினர். இவர்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் சிறந்து விளங்கினர். சீனாவில் குடியேறிய முஸ்லிம்கள் தங்களது முகம்மதிய பெயருக்குப் பின்னால் சீனப் பாரம்பரிய இன அடையாளப் பெயர்களை - மோ, மய், மு போன்றவற்றை - சேர்த்தே அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். முஸ்லிம் மதப் பழக்கங்களோடு சீன கலாசாரத்தையும் பழகினார்கள். சிறிது காலத்துக்குள்ளாகவே அவ்வவ் வட்டார மொழிகளில் பேசவும், சீன மரபு வழிகளில் வாழ்க்கையை நடத்தவும் ஆரம்பித்தனர்.

முஸ்லிம்களுக்கும், ஏனைய சீனர்களுக்கும் மோதல்போக்கு ஆரம்பித்தது சீனாவை ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் ஆட்சிசெய்த 'கிங்' மன்னர் பரம்பரைச் சேர்ந்தவர்களின் ஆட்சியின்போதுதான். இதற்கும் இனபேதம் தான் முக்கிய காரணம். 'கிங்' குடும்பத்தினர் மஞ்சு இனத்தைச் சேர்ந்தவர்கள், சீனாவில் உள்ள இனங்களில் இவர்கள் சிறுபான்மையினர். 1644-1911 வரை இவர்களது ஆட்சி இருந்தது. தாங்கள் ஆட்சியில் தொடர்ந்து இருப்பதற்காக மற்றைய இனத்தவர்களை ஒருவருக்கொருவர் மோதவிட்டனர். இதில், குறிப்பாக முஸ்லிம்கள் வெளியேயிருந்து வந்தவர்களாக இருந்தமையால், அவர்கள்மேல் வெறுப்பை ஏற்படுத்துவது எளிதாக இருந்தது.

இவர்களது ஆட்சிக் காலத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் முஸ்லிம்களோடு, ஐந்து பெரும் போர்கள் நடத்தப்பட்டன. இதில், முஸ்லிம்கள் பெருமளவில் உயிரையும், பொருளையும் இழந்தனர்.

1911ஆம் ஆண்டில் மஞ்சு இனத்தவர் தங்களது ஆட்சியை இழக்க, தலைவர் சன் யற் சென் சீன குடியரசை நிறுவினார். இவர் பதவிக்கு வந்ததும் "சீனநாடு, ஹன், ஹுய் (முஸ்லிம்) மெங் (மங்கோலியர்) மற்றும் சங் (திபெத்தியர்) ஆகிய அனைவருக்கும் உரியது'' என்று அறிவித்தார். ஆனால், இவரது ஆட்சிக் காலத்தில் பல பிரச்

**இஸ்லாமிய மார்க்கத்துக்கு சீன அரசாங்கம் சுதந்திரம் அளித்திருந்தாலும், மதவிவகாரங்கள் பலவற்றில் அரசின் சட்டரீதியான தலையீடுகள் இருக்கின்றன**

னைகள் எழுந்தன. சமூக கொந்தளிப்புகள், பிரச்னைகள் என்பன கட்டுப்படுத்த இயலாத நிலைக்குச் சென்றன. இவற்றைக் கலாசார புரட்சி என்று அழைத்த மா சேதுங், 1949இல் கம்யூனிஸ சிந்தனையைக் கருவாகவைத்து பெரும் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்தார். முஸ்லிம்கள் தங்களுக்கான அடையாளங்களுடன் கட்டுப்கோப்பாக வாழ்வது, கலாசாரப் புரட்சிக்கு எதிராக இருந்ததுபோலும். ஆகவே, அவர்கள் இருந்த பகுதிகளில் ஹன்ஸ் இனத்தவரைப் பெருமளவில் குடியமர்த்தினார். முஸ்லிம் தலைவர்களை பல்வேறு இடங்களுக்கு இடம்பெயரச் செய்தார். பலர் கொல்லப்பட்டனர். ஓர் இனத்துக்கு எதிராக மற்றோர் இனத்தைப் பயன்படுத்துவது, சீன அதிகார வர்க்கத்தினருக்குக் கைவந்த கலை. இதை மன்னர் மரபினரிலிருந்து, கம்யூனிஸ சிந்தனையாளர்கள் உள்பட அனைவருமே மேற்கொண்டனர். கலாசாரப் புரட்சி நடந்து கிட்டத்தட்ட மூன்று தலைமுறைக் காலத்துக்குப் பின்னால், தினமென் சதுக்கத்தில் ஜனநாயகத்தை வற்புறுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் - இவர்களில் பெரும்பாலோர் மாணவர்கள் - கூடினர். இவர்களை அடக்க இந்த இனத்தைச் சிறிதேனும் பிடிக்காத இராணுவ பிரிவை நாட்டின் வேறொரு பகுதியிலிருந்து அரசு கொண்டுவந்தது. அவர்கள் எந்த தயக்கமுமின்றி நூற்றுக்கணக்கான மக்களை டாங்கிகளில் ஏற்றியும், துப்பாக்கியால் சுட்டும் கொன்று, ஜனநாயக ஆர்வத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

1949இல் கம்யூனிஸம் சீனாவை விழுங்கியது. அடுத்த 29 வருடங்கள், மா சேதுங்கின் கலாசாரப் புரட்சியின் விளைவை முஸ்லிம்கள் உள்ளிட்ட சீனர்கள் அநுபவித்தனர். ஆனால், 1978இல் சீன அரசு முஸ்லிம்களுக்கு எதிரான கொள்கைகளை தளர்த்தியது. மதச் சடங்குகளைப் பின்பற்றும் உரிமை, கலாசார உரிமை, மொழி உரிமை போன்றவை வழங்கப்பட்டன. அதுவரையில் இவற்றில் எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை.

ஏற்கனவே ஒரே இடத்தில் இருந்ததால், நாடு தழுவிய அளவுக்கு பரந்திராததில் ஏற்பட்ட விளைவை முஸ்லிம்கள் அநுபவித்திருந்தனர். இப்போது சுதந்திர உரிமைகள் வந்தவுடன், சீனா முழுவதும் இஸ்லாமிய கூட்டமைப்புகள், சங்கங்கள், இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. அதிக எண்ணிக்கையில் நாட்டின் பல பகுதிகளிலும் மசூதிகள் உருவாயின. மேற்படி இயக்கங்கள் சீனாவில் உள்ள பல்வேறு இனங்களில் உள்ள முஸ்லிம்களை, இஸ்லாம் என்ற அடையாளத்தின் அடிப்படையில் ஒன்றுதிரட்டின. இந்தப் பணி மிக மும்முரமாக நடந்தது. இதில் தீவிரமாகச் செயல்பட்டவர்கள் சீனாவின் சின்ஜியாங் பகுதியில் உள்ள உய்கர் இன முஸ்லிம்கள். இவர்கள் துருக்கிய முஸ்லிம்கள். தங்களுக்கென்று தனி அடையாளங்கள், தனிமொழி மற்றும் பழக்க வழக்கங்களோடு, தீவிரமாக மத நடவடிக்கைகளில் இயங்கிவருகின்றனர்.

சின்ஜியாங் பகுதியில் சீனாவிலேயே மிகப்பெரிய பொம்மை தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. இதில், உய்கர் இனத்தவரோடு மற்றைய இனத்தைச் சேர்ந்தவர்களும் பணிபுரிகின்றனர். கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் இங்கு ஏற்பட்ட தகராறு, சாலைகளில் கலவரமாக வெடித்து ஏற்பட்ட பெரும் மோதலில் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துபோனார்கள். உய்கர் முஸ்லிம்களுக்கும் மற்றும் நாடுமுழுவதும் இயக்கரீதியில் இயங்குபவர்களுக்கும் வெளி உலகத்தைச் சார்ந்த முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களுக்கும் தொடர்பு இருப்பதாக சீன அரசு கருது கிறது. அதிலும் குறிப்பாக, ஆப்கா னிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய குடிய ரசுகள் போன்றவை இவர்களுக்கு ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்குவ தாக சீன அரசு நம்புகிறகிறது.

இக் காரணங்களால் முஸ்லிம்கள் விவகாரத்தை தனக்கே உரிய அடக்குமுறை பாணியைக் கொண்டு சீன அரசு செயல்படுத்துகிறது. சீனாவில் மொத்தம் 20 மில்லியன்களுக்குமேல் முஸ்லிம்கள் இருக்கின்றனர். அதிகாரபூர்வமாக நாட்டின் மக்கள் தொகையில் 1.4 வீதம்பேர் முஸ்லிம்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய மார்க்கத்துக்கு சீன அரசாங்கம் சுதந்திரம் அளித்திருந்தாலும், மத விவகாரங்கள் பலவற் றில், அரசின் தலையீடுகள் சட்ட ரீதியாக இருக்கின்றன. உதாரணமாக மசூதிகளின் சொத்தைப் பராமரிப்பது; இமாம்களின் பதவியைப்பற்றி முடிவுசெய்வது; முஸ்லிம்கள் குறிப்பிட்ட இடத்தில் அதிகமாக குவிவதைக் குடியேற்றங்கள்மூலம் தடுப்பது; பள்ளிக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் என யாராகவிருந்தாலும், மசூதிக்கு அடிக்கடி செல்லும் பழக்கம் உடையவர்களைப் பாடசாலைகளிலிருந்து நீக்குவது போன்றவற்றைச் சீன அரசாங்கமே செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் உள்ள பத்து இனத்தவர்களில் முஸ்லிம்கள் பரவியிருக்கிறார்கள். இவர்களும் மதரீதியாக ஒன்று சேர்ந்து வருகிறார்கள். இதையெல்லாம் சீன அரசால் சகிக்க முடியவில்லை. அதேசமயத்தில் அதைத் தடுப்பதற்கு எதுவும் செய்யமுடியவில்லை. இஸ்லாமிய தீவிரவாதம் தங்களது மண்ணையும் தாக்கும் என்ற உண்மையை கம்யூனிஸ சீனா உணர்ந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறது. இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு ஒன்று, 'சீனர்களோடு முஸ்லிம்கள் சேராதீர்கள்; ஒரே பேருந்தில் பயணம் செய்யாதீர்கள்' என்றெல்லாம் அறிவிப்புகள் செய்திருப்பதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இத்தகைய அறிவிப்புகள், மேலும் கடுமையான முறையில் பிரச்னையை எதிர்கொள்ள சீன அரசாங்கத்தை தூண்டியிருக்கின்றன. ஏற்கனவே துணை இராணுவப் படையினரை முஸ்லிம் தற்கொலைப் படை தாக்கியிருக்கிறது.

சீன அரசாங்கம் பொருளாதாரத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டுவருகிறது. உலகத்தில் மிகப்பெரும் சந்தை சீனாவில் உள்ளது. அதேசமயம், தனது உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைகளை அமெரிக்கா உள்பட பல நாடுகளில் பெருக்கியிருக்கிறது. அமெரிக்க டொலர்களை அபரிமிதமாகச் சேர்த்து, அந்த நாட்டுக்கே சவால்விட்டுக்கொண்டிருக்கிறது. பல நாடுகளில் வர்த்தகத்தின்போது, யூரோ மற்றும் அமெரிக்க டொலர்களிலல்லாமல் தனது நாட்டுப் பணமான 'யென்'னிலேயே பணத்தைச் செலுத்திவருகிறது. அதேபோல, தன்னிடமிருந்து அந்நாடுகள் பொருள்களை இறக்குமதி செய்யும்போது 'யென்'களை நாணய மாற்றாக ஏற்றுக்கொண்டுவருகிறது. பக்கத்திலிருக்கும் இந்தியா உள்பட அனைத்து நாடுகளையும் பல்வேறு விதங்களில் அச்சுறுத்திவருகிறது சீனா. அமெரிக்காவே சீனாவின் வளர்ச்சி குறித்து மிரண்டுபோயிருக்கிறது.

இந்நாடுகள் அனைத்தும் சேர்ந்து சீனாவைத் தொந்தரவுசெய்ய பயன்படுத்தக்கூடிய ஒரே ஆயுதம் முஸ்லிம் பிரச்னைதான். ஆனால், ஏற்கனவே இப்பிரச்னையால் தவிக்கும் அவர்கள், சீன நாட்டுக்குள் இதே பிரச்னையை தூண்டிவிடுவார்களா என்பது பெரிய கேள்விக்குறி. இந்த தயக்கமும் ஊசலாட்டமும் இருக்கும்வரை சீனா தனது முஸ்லிம் மக்களைத் தன் விருப்பம்போல நடாத்தலாம். அதுதான் உண்மையில் அங்கு நடந்தும்வருகிறது. ■

- A Trip or a Slip
- A Brake or a Shake
- A knock or a Shock



# Jus the Personal Touch

## Accident Management Company

- You will receive 100% of your compensation
- No Win No Fee
- Panel of specialised Solicitors
- We offer Home Visits



**We are an Accident Management Company which deals with all aspects of Personal Injury Claims to include:**

**Road Traffic Accidents, Accidents at Work, Trips and Slips, Industrial Disease and Clinic Negligence Cases**




**Call Jus the Personal Touch today on**

**0800 756 1114**

**0800 756 1115**

E-Mail: jtpt@rocketmail.com

**Don't let someone else mistake be yours**

REF:

**Remember you have only 3 years from the date of the accident to make a claim.**



# ‘காஞ்சிபுரம் பட்டு’

## பாரம்பரியமும் தூய்மையும் துலங்கும் உன்னத சங்கீதம்

பிங்காட்சன்

**இம்மியும் பிறழாத சுருதி; ராகங்கள், கீர்த்தனைகளை பாடுவதில் அழுத்தம்; மிகமிக கடினமான கணக்கையும், நிர்ணயத்தையும் கொண்ட தாளம்; இவற்றின் உருவம்தான் பட்டம்மாள்**

படம்: ‘கலைமாமணி’ யோகா

பிரபல இசைக்கலைஞர் டி. கே. ஜயராமனின் இசைக்கச்சேரி ஒளிப்பதிவாகிக் கொண்டிருந்தது. அவர் பாடுவதை அவருடைய சகோதரி டி. கே. பட்டம்மாள் ஒளிப்பதிவு கூடத்தில் கேட்டுக்கொண்டிருந்தார். அவருடைய பாட்டு அடுத்ததாக ஒளிப்பதிவுசெய்யப்படவேண்டும். இருவரும் இணைந்து பாடுவதை நிறுத்தி அப்போது சில ஆண்டுகள் ஆகியிருந்தன.

“லாவண்யராமா கந்நுலார ஜூடவே...’’

பூர்ணஷட்ஜ ராகத்தில் அற்புதமான அந்த தியாகராஜ கீர்த்தனையை உணர்ச்சி பாவத்துடன் ஜயராமன் பாடிக்கொண்டிருந்தார்.

“ஶ்ரீவநிதா சித்தகுமுதரா...’’ அநுபல்லவியை திரும்பப் பாடுமுன், பட்டம்மாள் குறுக்கிட்டார்.

“நிறுத்துப்பா...’’

பாட்டை நிறுத்தினார் ஜயராமன்.

“ஶ்ரீவநிதா சித்தகுமுத’ என்று பாடவேண்டும். முடிவில் ‘ரா’ என்று பாடுகிறாயே; அங்கே எங்கே ‘ரா’ வந்தது?’’

தம்பி தப்பாக பாடுகிறானே என்ற ஆதங்கம் அவர் குரலில் இருந்ததேதவிர, குரல் கனிவுடன் தான் ஒலித்தது. அவருக்குக் கோபமே வராது என்பார்கள்.

ஜயராமன் திருத்திப் பாடினார்.

இசைக்காக ஓர் எழுத்தைக்கூட கூட்டிப் பாடக்கூடாது என்பது அவருடைய மரபு. அதுதான் டி. கே. பட்டம்மாளின் சிறப்பு. ஒப்பற்ற கலைஞர் அவர்.

• பட்டம்மாளின் பாணி தனியானது; தூய்மையானது; கலப்படம் இல்லாதது. மரபு வழுவாத சங்கீதம்.

அப்பழுக்கற்ற உச்சரிப்பு. ‘தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி, பாபநாசம் சிவன், அருணாசல கவிராயர், முத்துத்தாண்டவர் என, எந்த மொழிக் கீர்த்தனையானாலும் அதன் உண்மையான வடிவம், பாடாந்தரம் வேண்டுமா? பட்டம்மாளிடம் கற்றுக்கொள்ளலாம்’ என்பார்கள்.


சங்கீத மும்மூர்த்திகளைப்போல, பெண் மும்மூர்த்திகளாக எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்தகுமாரி ஆகிய மூவரும் தனித்தனிச் சிறப்புகளுடன் கோலோச்சிவந்தார்கள். (என். சி. வசந்தகோகிலம் என்ற கலைஞர் இளமையில் மரணமடைந்துவிட்டார்.)

டி. கே. பட்டம்மாளின் குரல் தனிச் சிறப்புடையது. மற்றைய பெண் கலைஞர்களைப் போல இனிமையான குரல் என்று கூறமுடியாது. என்றாலும், இரண்டரைக் கட்டை சுருதியில் பாடியபோது, குரலின் ஆழமும் காத்திரமும் கனமும் உச்சரிப்பும் கேட்போரைக் கட்டிப்போட்டுவிடும்.

இம்மியும் பிறழாத சுருதி; ராகம், கீர்த்தனைகளைப் பாடுவதில் அழுத்தம்; மிகமிகக் கடினமான கணக்கையும், நிர்ணயத்தையும் கொண்ட தாளம்; இவற்றின் உருவம்தான் பட்டம்மாள். அவருடைய ராக ஆலாபனைகளில் ஆடம்பரம் இருக்காது. ஆற்றொழுக்காகப் பாடுவார்; ஆழம் இருக்கும். ராகத்தின் முழு சொரூபத்தையும் நம் முன் கொண்டுவந்து நிறுத்திவிடுவார்.

“காஞ்சிபுரம் நயினாபிள்ளையை ‘லய சிங்கம்’ என்பார்கள். அவருடைய கச்சேரிகளைக் கேட்டுக்கேட்டு எனக்குத் தாளத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. சுருதி மாதா, லயம் பிதா இல்லையா’’ என்றார் பட்டம்மாள் ஒரு பேட்டியில்.

ராகம்-தானம்-பல்லவி பாடுவது என்பது எளிதல்ல. ஆண் பாடகர்களால் மட்டுமே பாட



டி. கே. ஜயராமன், டி. கே. பட்டம்மாள்



'மும்மூர்த்திகள்'
எம். எல். வசந்தகுமாரி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி, பட்டம்மாள்

முடியும் என்ற கருத்தை முறியடித்தார் பட்டம்மாள். சொல்லப்போனால், ராகம்-தானம்-பல்லவி பாடிய முதல் பெண் பாடகி டி. கே. பட்டம்மாள்தான்.

காஞ்சிபுரம் அருகே தாமல் என்ற கிராமத்தில் பிறந்த பட்டம்மாள், பெயர் சொல்லும்படியான எவரிடமும் பயிலவில்லை. காஞ்சிபுரம் நயினாபிள்ளையின் இசையைக் கேட்டுக்கேட்டு வளர்ந்தார். சரளி வரிசை, ஜண்டை வரிசை என்று அரிச்சுவடியிலிருந்து அவர் கற்கவில்லை.

ஒருமுறை தனது பன்னிரண்டாவது வயதில் 'சத்தியவான் சாவித்திரி' என்ற பள்ளிக்கூட நாடகத்தில் நடித்துக் கொண்டே பாடினார். அன்றுதான் தொடங்கியது அவருடைய இசைப் பயணம். ஆசாரமான பிராமண குடும்பத்தில் பிறந்த பெண், மேடையேறிப் பாடுவது என்பது, அன்றைய காலகட்டத்தில் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத ஒன்று.

ஆனால், எதிர்ப்புகளை மீறி, அவர் திறமை மிறிட்டது. 1932ஆம் ஆண்டு சென்னை ரசிக ரஞ்சன சபாவில் முதல் கச்சேரி. பின்னர், அடுத்தடுத்து கச்சேரிகள் தொடர்ந்தன.

மேடைக் கச்சேரி நிகழ்த்திய முதல் பிராமணப் பெண் பட்டம்மாள்தான்.

"பரதநாட்டியத்தில் ருக்மிணி தேவியைப்போல, கர்நாடக இசையில் நான் ஒருத்திதான் பிராமண சாதியிலிருந்து வந்தவள்'' என்று அவர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

சுப்புலக்ஷ்மியின் இசையில் குரல் இனிமையும் பக்தி பாவமும் மிகுந்திருந்தன என்றால், பட்டம்மாளின் குரலில் அழுத்தமும், சாகித்திய அர்த்தபாவமும் செறிந்திருந்தன.

"ரங்கபுர விகார..'' என்ற தீக்ஷிதரின் கிருதியை இரண்டுபேருமே பாடியிருக்கிறார்கள். அதைக் கேட்டால் இரண்டில் எது சிறந்தது என்பதைக் கண்டுபிடிப்பது கடினம். எனினும், பட்டம்மாளின் பாணி இசை மாணவர்களுக்கு தெளிவான பாடமாக இருக்கும்.

பட்டம்மாள் தீக்ஷிதர் கிருதிகளை, தீக்ஷிதரின் பேரன் அம்பி தீக்ஷிதரிடமும், தீக்ஷிதர் கிருதிகளில் மேதமை மிகுந்தவர் எனக் கருதப்பட்ட ரி. எல். வெங்கட்ராம ஐயரிடமும் கற்றதால், அவரே முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகளுக்கு யோக்கியதையானார்.

பாபநாசம் சிவனிடம் நேரடியாக அவருடைய பாடல்களை கற்றுக்கொண்டார். தமிழிசைபால் தனிப்பற்றுக் கொண்டு, அருணாசல கவிராயர், முத்துத்தாண்டவர் பாடல்களுடன் தேவாரம், திருப்புகழையும் கச்சேரிகளில் பாடினார். "எப்படிப் பாடினரோ..'', "யாரோ இவர் யாரோ..'', "தீராத விளையாட்டுப் பிள்ளை...'', "நானொரு விளையாட்டுப் பொம்மையா..'', "சாந்தி நிலவவேண்டும்..'' ஆகிய பாடல்கள் அவரால் புகழ்பெற்றன. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து இவருடைய குரலில் துள்ளி விளையாடும்.

திரைப்படங்களுக்கு பட்டம்மாளை அறிமுகம்செய்தவர் பாபநாசம் சிவன்தான். டைரக்டர் கே. சுப்பிரமண்யத்தின் 'தியாகபூமி' படத்தின் உச்ச கட்டத்தில் இவர் பாடிய "பழம் பெரும் பாரத நாடு..'' இவர் திரையில் பாடிய முதல் பாட்டு. 'ராமராஜ்யம்' படத்தில் "எனக்கும் நிருபதம் அளிக்க வரமருள்வாய்..'' என்ற பாட்டு தலைப்புப் பாட்டாக வந்தது.

'நாம் இருவர்' படத்தில் பாரதியின் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே...'', "வெற்றி எட்டுத் திக்குமெட்ட கொட்டு முரசே...'' என்ற பாடல்களைப் பாடினார். அவர் கடைசியாகப் பாடியது, கமல் ஹாசனின் 'ஹே ராம்' திரைப்படத்தில்.


இனிய பண்பாளர்; விசாலமான உள்ளம் கொண்டவர்.

சென்னை, மியூசிக் அக்கடெமி முதலில் இவருக்கு 'சங்கீத கலாநிதி' பட்டம் கொடுப்பதென்று முடிவுசெய்து, பின்னர் அந்த முடிவை மாற்றிக்கொண்டு எம். எஸ் சுப்புலக்ஷ்மிக்குக் கொடுத்தது. அதற்கு பட்டம்மாள் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டார்.

அடுத்த ஆண்டு மியூசிக் அக்கடெமி அவருக்கு அந்த விருதைக்கொடுக்க முன்வந்தது. ஆனால், இசைமேதை மதுரை சீரங்கம் ஐயங்காருக்கு அந்த ஆண்டு அந்தப் பட்டம் அளிக்கப்படவேண்டும் என்று அவரே பரிந்துரைத்தார். மூன்றாவது ஆண்டுதான் பட்டம்மாளுக்கு அந்த விருது கிடைத்தது. வைஜயந்திமாலா, ஜெயலட்சுமி சந்தானம், நித்யஸ்ரீ மகாதேவன், டி. கே. ஜயராமன், அவர் வழியில் விஜய்சிவா என்று இசைவாரிசுகளை உருவாக்கியுள்ளார்.

மரபுவழி தவறாத கலைஞர் என்றாலும், பி. சுசிலா, எஸ். ஜானகி ஆகியோருடைய திரைப் பாடல்களை விரும்பிக் கேட்டு, பாராட்டும் பழக்கம் உடையவர்.

'டி. கே. பட்டம்மாள், சங்கீதத்துக்காக பாடுபட்டம்மாள்' என்று செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் கூறுவது வழக்கம்; மறுக்கமுடியாத உண்மை. ■





பட்டம்மாள், நித்யஸ்ரீ



பட்டம்மாள், ஈசுவர ஐயர், நல்லி குப்புசாமி செட்டியார், ஏ. நடராஜன்

# எளிமை, இனிமை

சில ஆண்டுகளுக்கு முன்னால் அடையாறு எம். ஆர். சி. திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தைப் படப்பதிவு செய்யப் போயிருந்தோம். அப்போது ஊஞ்சல் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு, ஊஞ்சல் மணமக்களின் அருகே வந்தார் டி. கே. பட்டம்மாள். வந்ததுமட்டுமல்லாமல், மற்றைய பெண்மணிகளோடு சேர்ந்து சம்பிரதாயமான ஊஞ்சல் பாடல்களையும் அம்மா பாடினார்கள். அசாதாரணமான இந்த நிகழ்ச்சி என்னை பிரமிப்புக்குள்ளாக்கியது. 'இந்த மணமக்கள்தாம் எத்தனை பேறுபெற்றவர்கள்' என்று நினைத்துக்கொண்டேன்.

திருமதி பட்டம்மாள் அவர்களை 'பட்டா' என்று நெருக்கமானவர்கள் அழைப்பார்கள். சங்கீத மும்மூர்த்திகள் மாதிரி நம்முடைய சம காலத்தில் வாழ்ந்து இசைக்கு வளம் சேர்த்த 'திரிசக்திகள்' என்று எம். எஸ். அம்மா, எம். எல். வி. அம்மா, டி. கே. பி. அம்மா மூவரையும் குறிப்பிடலாம். இவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதே நமக்குக் கிடைத்த பெருமை.

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில், பிரம்மகான சபாவின் சார்பில் டி. கே. பட்டம்மாள் அவர்களுக்கு பாராட்டும் கேடயமும் வழங்குவதாக ஏற்பாடாகியிருந்தது. ஆனால், அந்த நிகழ்ச்சியில் வந்து கலந்துகொள்ளமுடியாத உடல்நிலையில் அம்மா இருந்தார். எனவே, டாக்டர் நல்லி செட்டியாரும் தூர்தர்ஷன் நடராஜனும் அம்மையாரின் இல்லத்துக்கே சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, கேடயத்தையும் வழங்கி மரியாதையை வெளிப்படுத்திக்கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியை நான் படப்பதிவு செய்தேன். அப்போது அம்மையாரின் கணவர் ஈசுவர ஐயர் எல்லோரையும் வரவேற்று அன்புடன் உபசரித்து, தம் கையாலேயே எமக்கு சிற்றுண்டி வழங்கியதும் நினைவுக்கு வருகிறது.

பட்டம்மாள், ஈசுவர ஐயர் தம்பதிக்கு சிவகுமார், லக்ஷ்மன் என்று இரண்டு பிள்ளைகள். சிவகுமாரின் மகன்தான் இன்று பிரபலமான பாடகியாக விளங்கும் நித்யஸ்ரீ மகாதேவன். இவருக்கு பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசிப்பவர் அப்பா சிவகுமார்தான். அம்மா லலிதா, மிருதங்க மேதை பாலக்காடு மணி ஐயரின் புதல்வி.

ஏழு வயதுச் சிறுமியாக இசையுலகின் கவனத்தை ஈர்த்த பட்டம்மாள் பிறந்தது காஞ்சிபுரத்தில். அவருக்கு அலமேலு என்றுதான் பெயர்வைத்திருந்தார்கள். அலமேலுவின் இசைத்திறனைக் கேள்விப்பட்டு, தியாகராஜ ஆராதனையில் பாடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் காஞ்சிபுரம் நயினாபிள்ளை அவர்கள்.

தம்முடைய கணீர் குரலால் பாரதி புகழ் பரப்பிய திருத்தொண்டிலும் டி. கே. பட்டம்மாள் அவர்களைப் போற்றி வணங்க தமிழர்கள் கடமைப்பட்டவர்கள். மத்திய அரசின் 'பத்மபூஷண்' 'பத்மவிபூஷண்' ஆகிய உயரிய பல விருதுகளையும் பெற்றவர் பட்டம்மாள். 'பல்லவி பட்டம்மாள்' என்று சிறப்பாக குறிப்பிடப்படும் அளவுக்கு, சிக்கலான பல்லவிகளை இசை நுட்பத்தோடு பாடியவர்.

சென்னை நகரின் கோட்டூர்புரம் மிகவும் பாக்கியம்செய்த பூமி. அங்கேதான் சங்கீத மும்மணிகளில் இருவரான எம். எஸ். அம்மாவும் டி. கே. பட்டம்மாளும் இயற்கையோடு, நாதலயத்தோடு சங்கமமாகி, பெருமைப்படுத்தியிருக்கிறார்கள்.

**– 'கலைமாமணி' யோகா**



லண்டனில் அரங்கேற்ற 'சீசன்'

# வெளிப்படும் அபரிமித ஆற்றல்கள்

மாலி

லண்டனில் 'சீசன்' ஆரம்பமாயிற்று; 'அரங்கேற்ற' சீசன்.

குடும்ப வைபவமொன்றாக நடந்து முடிபவைதான் அநேகமானவையெனினும், ஒவ்வோராண்டும் ஓரிரு அபரிமித ஆற்றல்கள் இதில் வெளிப்படுவதில், பெரும் செலவின சமாச்சாரமாக இருந்தாலும் வேண்டாதவை; வீணானவை என்று இவற்றைச் சொல்லவைக்கவில்லை. சீசன் அறுவடையாக அடுத்த தலைமுறையொன்றில் வித்வம் நிறைந்த இளைஞர், யுவதிகள் சிலர் வாய்ப்பாட்டு, நடனத்திலும்; வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கெஞ்சிரா, தபேலா என்று வாத்திய இசைக்கருவிகளிலும் ஆர்வமும்சேர நன்றே 'ஜமாய்க்கிறார்கள்'.

தவிர, தொடர்கிறார்களோ இல்லையோ, தம்முடைய கிரகித்து வெளிப்படுத்தும் ஆற்றலை பரிபூரணமாக வெளிப்படுத்தி, ஒரு கச்சேரிபோலவே 'ஓஹோ' என்று நிஜமாகவே 'அசத்தி' விடுகின்ற அரங்கேற்றங்கள் பல. நிச்சயமாக ஒரு நிறைவை; நமது இசை, நடனத்தின் உன்னதத்தை அவை தருகின்றன; தொடுகின்றன.

நகலோ அசலோ, கச்சிதமான கல்பனாஸ்வரங்கள், ராகம்-தானம்-பல்லவிகள், சஞ்சாரி பாவங்கள்.

கடம், கெஞ்சிரா, மோர்சிங் என்று, அரிதானவையாய் இருந்த உப பக்க வாத்தியங்களெல்லாம் சம இடத்தைப் பிடிக்கின்றன. மிருதங்கம் வாசிக்கும் சிறுவர்கள், இளைஞர்கள் பலர் இவற்றிலும் தேர்ச்சிபெற்று வாசிக்கிறார்கள்.

வாத்திய கருவிகளில் அரிதானதான புல்லாங்குழலும் அப்படித்தான். பலர் பயில்கிறார்கள்; ஆர்வத்துடனும் வித்வத்துடனும் ஓரிருவர் நன்றே சிறக்கிறார்கள்.

இந்த பின்னணியில், தொடங்கியுள்ள புதிய சீசனில் பார்த்த முதல் அரங்கேற்றம், பின்னணிக்கு மேலும் வலு சேர்க்கிறது.

கர்நாடக இசையில் வாய்ப்பாட்டுக்கே முன்னோடியானது புல்லாங்குழல். எனினும், புல்லாங்குழலில் மிகுந்த பிரசித்தியைப் பெற்றவர்கள் மிகச்சிலரே. அதிலும், பெண்கள் நீலா, குஞ்சுமணி, சிக்கில் மாலா இப்படி ஒரு சிலர்.

தாரிணி ரஞ்சன் என்ற யுவதியின் புல்லாங்குழல் அரங்கேற்றம் இது. ரமணியின் சிஷ்யராக லண்டனில் தங்கியிருக்கும் திரு ரி.ராகவராமனின் சிஷ்யை.

தந்தையார் நல்ல இசை, நடனத்தை ரசிக்கவென்றே மார்கழி சீசனில் சென்னை செல்பவர். அவருடைய மகளின் அரங்கேற்றம் என்பதில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. அப்படி ஓர் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தை ஏற்படுத்திவிடுவது எளிது. ஆனால், பார்த்தது எதிர்பாராதது.

சுருதி மாதா, லயம் பிதா என்பார்கள். மாதா, பிதாவில் எந்த பிசகுமில்லை. நல்ல தாள நிர்ணயம்; நிதானம்; தன்னம்பிக்கை; அநாயாசம்.

"வாதாபி கணபதிம்…'' ஹம்சத்வனியில் இவற்றைச் சொன்னவர், திருப்புகழ்வரை சொல்லிச் சென்றார்.

திருப்புகழ்வரை என்றால், ஏழெட்டு உருப்படிகள் என்பதா? இல்லை; பதினேழு உருப்படிகள். தாரிணி லயிப்போடு வாசித்தார்; அவை லயிப்போடு கேட்டது.

'அவை, கட்டுண்டுபோயிருந்தது' என்று ஓர் அரங்கேற்ற நிகழ்ச்சியைச் சொல்லலாமா? ஆனால், அதுவேதான். பக்கவாத்தியங்கள், அநுசரணை என்பது மாத்திரமல்லாமல், தூக்கிக் கொடுத்து உற்சாகமும் சேர்த்தன.

சீரான ஒலியமைப்பு; பிருந்தாவனம் போல் ரம்மியமான ஒரு மேடை; நிசப்தமான அரங்கு; ஒவ்வோர் இராகத்திலும் அதன் குழைவு; நேர்த்தி. அதற்கு மெருகு சேர்த்து வயலின்.

ஆரபி, வாசஸ்பதி, மத்தியமாவதி, சுத்தசாவேரி ஆலாபனைகள், ஸ்வர பிரஸ்தாரங்கள், குறைப்புகள் நேர்த்தியாகவும் கச்சிதமாகவுமிருந்தன. காம்போதியில் இராகம் - தானம் - பல்லவி.

ஆக, பதினேழு உருப்படிகளை தொய்வு ஏற்பட்டுவிடாதபடி வாசிக்க அவரால் முடிந்தது; அது, சலிப்பின்றி அவையினரைக் கேட்கவைத்தது.

ஆனால், உருப்படிகளின் ஒழுங்கு ஒரு கச்சேரியின் நிறைவைத் தரவில்லை.

விதம்விதமான பண்டங்களை வயிறு நிறைய சாப்பிடுவதற்கும், அளவோடு சுவையாக, ஒழுங்காகச் சாப்பிடுவதற்கும் வித்தியாசம் உண்டு அல்லவா? சாப்பிட்டு அநுபவிக்காமல் அநுபவித்துச் சாப்பிடவேண்டாவா?

பிற்பகுதியில், இராகம் - தானம் - பல்லவிக்கு பின்னர், சுத்தசாவேரியில் "தாரிணி தெலுஸுு கொண்டி…''. தர்பாரி கானடாவில் "மருதமலை மாமணியே…''க்குப் பின்னர், காபியில் "என்னதவம் செய்தனை…''. இடைவேளைக்கு முதற்பகுதியில் மத்தியமாவதியில் ''ஆடாது அசங்காது வா கண்ணா…''.

தில்லானாவுக்கு நான்கு உருப்படிகளுக்கு முன்னதாக "சாந்தி நிலவவேண்டும்…''

டி. கே. பட்டம்மாளால் பிரபல்யமடைந்த இந்த பாடல் தில்லானாவுக்குப் பின்னர், திருப்புகழுக்கு முன்னதாக இடம்பெற்றிருந்தால், நிகழ்ச்சிக்கு ஒரு நல்ல நிறைவையும், கூடவே கர்நாடக இசை மேடையில் முதன்முதலாக தோற்றி மறைந்த அந்தப் பெண் வித்தகிக்கு (பட்டம்மாள்) அரங்கேறும் ஓர் இளம் யுவதியின் மானசீக அஞ்சலியையும் அது ஏற்படுத் தியிருக்கும்.

நடைபெறும் அரங்கேற்றங்களில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்டுவிடுகின்ற தவறுகள், அடுத்து வரும் அரங்கேற்றங்களுக்கு முன்மாதிரியாக அமைந்துவிடுகின்ற ஓர் 'அவலம்' தொடர்வதால்தான் சிலவற்றைச் சொல்லவேண்டியதாகிறது. தாரிணியின் அரங்கேற்றத்தில் அவர் தன்னை வெளிப்படுத்திய விதம் குறைகள் அனைத்தையுமே விஞ்சியது.

மாடு மேய்க்கும் கண்ணனும், கோகுலத்தில் கோபியர்களுடன் கொஞ்சும் கண்ணனும் ஓடியாடி புல்லாங்குழலை இசைக்கலாம். ஆனால், சாராபா சாஸ்திரி புல்லாங்குழலை மேடைக்கச்சேரிக்கான இசைக்கருவியாக்கி சுமார் 120 ஆண்டுகள் கடந்துவிட்டன.

ஆக, சிவகணேஷ் வயலின் பிரமாதம்; அந்த ஆரபி அற்புதம். பவானி சங்கரின் வாசிப்பும், அவரது மிருதங்கத்தின் சுநாதமும் இசையோ நடனமோ அரங்கேறும் எவருக்குமே உற்சாக மூட்டுவது. பிரகாஷ் கடம்; சிதம்பரநாதன் மோர்சிங்.

தாரிணிக்கு இந்த வித்தையை ஆரம்பித்த திரு பிச்சையப்பா ஞானவரதன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இது சொல்லவேண்டியது.

ஆக, குருவிடம் கற்றுத் தேர்வதென்பதற்கு அப்பால், இயற்கை ஞானம் என்ற ஒன்றும் உண்டு. அது ஒரு தனி மேன்மையை அளிக்கிறது. அந்த மேன்மை தாரிணியில் தெரிகிறது.

ஆக, சீசனில் வெளிப்பட்ட ஓர் அபரிமித ஆற்றல் இது. தொடரக்கூடியவர்; தொடரவேண்டியவர். ■

# வாசல்தேடி யுத்தம்



வெளியே எறித்துக்கொண்டிருந்த வெய்யில் கண்ணாடி யன்னல்களையும் துளைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளேயும் சுட்டுக்கொண்டிருந்தது. இவ்வருடத்துக்கான கோடை, முன் முற்றத்து பூந்தோட்டத்தில் செழித்திருந்த நான்கு மணி பூமரங்களை முற்பகலே பூக்க வைத்துவிட்டது. குங்கும நிறத்தில் படர்ந்து கிடந்த அப் பூமரங்கள்கூட சுருண்டு மெல்ல வாடிக்கொண்டிருந்தன. எதிர் வீட்டுச் சிறுவர்கள் தண்ணீர் விசிறி விளையாடிக்கொண்டிருந்தனர்.

வீட்டுக்குள் எந்தச் சத்தமும் இல்லை. இலவச தமிழ் தொலைக்காட்சி சேவைகளைப் பார்க்க அங்கு ஒருவரும் இல்லை. மயான அமைதி.

அந்த நான்கு நாட்களும் மௌன விரதம் நடத்திக்கொண்டே இரண்டு உயிர்கள் வீடு முழுவதும் சஞ்சரித்துக்கொண்டிருந்தன.


இருபது வருடம் சேர்ந்து வாழ்ந்த அந்தத் திருமண வாழ்வில் அண்மைக் காலம் கசப்புடையதாய் பிரிவும் துயரும் நிறைந்திருப்பதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் உள்ளது.

ஐரோப்பிய வாழ்வுச் சூழலில் வசதிகள், தொழில், பதவிகள், பணம் அனைத்தையும் தேவைக்கதிகமாகவே தேடிக்கொண்டாலும் நிம்மதியின்மை, ஏக்கம், தாழ்வுமனம், சந்தேகம் நம்பிக்கையீனம் என்பன பெரும் பூதமாய் வளர்ந்து, குடும்பவாழ்வில் பயம்காட்டுகிறது என்பதை பலர் உணரமுடியாமல்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குள் சண்டைகள் தொடங்குவதற்கான காரணங்கள் மிகமிக அற்பமானதாகவே இருக்கின்றன. கறுவிக்கொண்டு கொட்டிவிடுகின்ற வார்த்தைகள்; வார்த்தைகளில் பிடித்துக்கொள்ளும் நொட்டைகள்; எதிர்பாராத வார்த்தைப் பிரயோகங்கள், மறக்கமுடியாதபடி கோபமாய் ஆக்ரோசமாய் உருமாறி உலுப்பித்தான் விடுகின்றன.

அந்த இருவரும் தனித்தனி இடங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அதற்குள்ளே முடங்கிவிடுகிறார்கள். சண்டையே வேண்டாம் சமாதானம் கொள்ளலாம் என்றால்கூட அவர்களது விட்டுக்கொடாமை என்ற பொய்யான தன் மானம் மீண்டும் மீண்டும் மௌன விரதமாய் தொடர்கிறது.

எல்லா வீடுகளிலும் இரண்டு நட்புக் கிடையில் சண்டை வராமலிருப்பது அதிசயம்தான்.

அவன், நான் கௌரவமும் மதிப்புமுள்ள மனிதன் என்கின்ற ஆண். அவள், எந்த அடிமைக் கட்டுக்குள்ளும் நிற்கமாட்டேன் என்கின்ற பெண்.



அந்த வீட்டுக்குள் இருவரும் சமம். நட்புக்கு நட்பு; உறவுக்கு உறவு; சண்டைக்குச் சண்டை; கவலைக்குக் கவலை சமாதானத்துக்குச் சமாதானம்.

பகைமையில்கூட ஒரே வீடு, ஒரே படுக்கை, ஒரே உணவு என்று எல்லா அசைவுகளிலும் உறவாடிக்கொண்டிருக்கும் நட்புகள்.

தேவி, வயது நாற்பத்தைந்து. ஹொலண்டில் அகதித் தஞ்சம் கிடைத்து டச்சு மொழியையும் பின்னர் தொழிற் கல்வியையும் பெற்று கடந்த பத்து வருடங்களாக முழுநேர தொழில்புரிந்துவருகின்ற ஒரு தாதி.

குமார் வயது நாற்பத்தெட்டு. ஹொலண்டில் அகதிதஞ்சம் கிடைத்து மொழியும் தொழிலும் கல்வியூடாகப் பெற்று முழுநேர உழைப்பாளியாகி பல் வேறு முயற்சிகளில் ஈடுபாடுள்ள ஒருவன்.

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் தமிழ், வயது இருபது. நெதர்லாந்தில் கட்டாய இராணுவ சேவைக்கு அனுப்பப்பட்டு பின்னர் அவனது சொந்த விருப்பின்படி விசேட இராணுவ பிரிவொன்றில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இளையவள் சிந்து, வயது பதினெட்டு. பல்கலைக்கழக கல்விக்காக பெற்றோரைப் பிரிந்து முக்கிய பெருநகரில் சிறு அறை ஒன்றில் தங்கியிருந்து படித்துவருகிறாள்.

பிள்ளைகள் இருவரும் அடிக்கடி பெற்றோரிடம் வந்துபோவதும் இணையம், தொலைத் தொடர்புகள் ஊடாக பேசிக்கொள்வதும் கிரமமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

குமாரின் இரவு இரண்டாவது வேலையும் பிள்ளைகளின் பிரிவும் தேவியை சோகத்தில் ஆழ்த்திவிட்டது. பிரிவு, பயம், தனிமை என்பன அவளின் மனத்தாங்கல்களாக தெரிகின்றன. தன் பெற்றோர்களோ உறவுகளோ கடைசியில் தன் பிள்ளைகளோ இல்லாத வாழ்வை அவளால் சகித்துக்கொள்ள முடிய வில்லை. குமார் இரவு வேலை காரணமாக காலங்கடந்து வருவதும் அவளுடைய ஆவேசத்துக்கு பெரும் இலக்காகிவிட்டது.

எரிச்சலும் மனச்சுமைகளும் உடலில் பலவீனத்தை தோற்றுவித்துவிட்டன. பகல் முழுவதும் வேலை தொடரும். வீட்டுப் பணிகள் வேறு. மனச் சோர்வு, பெண்களுக்கே உரித்தான உள்ளார்ந்த உடல் உபாதைகள் முதலியவற்றினால் அவள் தனது கணவன்மீது கோபமாக எரிந்து விழுந்தாள். அவள் ஒரு சாதாரண பெண். இரக்கமும் உணர்வுகளும் மிக்கவள். பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் இழந்து, பின்னர் கணவனின் சுகத்துடனும் பிள்ளைகளின் ஆறுதலுடனும் பொறுப்புகள் குவிந்து கிடந்த அவளுடைய மனம்

இப்போது தனிமையும் பிரிவுமாய் குழம்பிப்போய் கிடக்கிறது.

அவனோ தன் தேசம், பொதுச் சேவைகள், குடும்பம், பிள்ளைகள் என்ற கூட்டுக்குள் பல்வேறு நோய் களை உடலில் சுமந்துகோண்டு சுறுசு றுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன்தான். தம் வாழ்வின் தேவை களோடும் கற்பனைகளோடும் அவர் கள் இருவரும் எல்லா வசதிகளையும் தேடிவைத்துத்தான் இருக்கிறார்கள். அவ் வசதிகள் அனைத்துமே இவர்க ளது கடும் உழைப்பு என்பதை அவர்க ளைச் சுற்றி வாழும் அனைவரும் அறிந் துதான் இருக்கிறார்கள்.

ஆனால், அவர்களுக்கிடையே இப் போது அடிக்கடி சண்டைவந்து தொலைக்கிறது. பேசாமல் இருக்கும் நாட்கள் அதிகம். மௌனம், கோபம், மனச்சோர்வு என்பன அவர்களிடத் தில் புதிய பல நோய்களை கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன.

இளமையில் அவர்கள் காதல் கொண்ட நாள்களும், பிரிந்துபட்ட துன்பமும் இன்னமும் பசுமையாக இருக்கின்றனதான். திருமணத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளும் அவற்றை யெல்லாம் கடந்து வாழ்வில் ஒன்றி ணைந்ததும் எவ்வளவு அற்புதமா னவை.

குமரபுரம் என்ற அழகிய கிராமத்தி லிருந்து திருநகருக்கு அவனின் மிதி வண்டி சொல்லாமலே போய்விடும். அங்கு கவிதைகளும் பாடல்களும் காத லின் சின்னமாய் எழுதப்பட்டு இன்ன மும் கிடக்கிறது. மாம்பூக்களின் மணத் தோடு அறுக்கையாய் அடைக்கப் பட்ட அரை ஏக்கர் கிடுகு வேலிகளுக் கிடையில் இனிய சுகத்தோடு வாழ்ந்த அந்தக் கால நினைவுகள் மட்டும்தான் பசுமையோடு வந்துபோகிறது. அவற்றை நினைத்துப்பார்க்க மட்டும் தான் இப்போது முடிகிறது. வாழ்வில் இருந்த நம்பிக்கைகள் குடும்ப வாழ்வின் நெருக்க டிகளால் சிதறிக்கிடக்கின்றன. அவர்களுக்கான விரிசல்களை ஒட்ட வைப்பதற்கான எந்த ஆதாரமும் உறவு களும் மனத்தென்பும் நம்பிக்கைகளும் பொதுத்தன்மைகளும் ஐரோப்பிய சூழலில் தொலைந்துபோய்விட்டதா கவே உணர்கிறார்கள்.

அன்று சனிக்கிழமை வேலைமு டிந்து வீட்டுக்கு வந்தபோது நேரம் ஒருமணியாகிவிட்டது. வீட்டுக்குள் அனைத்தும் அப்படியே கிடந்தன. அன்றைய புதினப் பத்திரிகை 'ரெலிகி ராப்' பரபரப்புச் செய்திகளாலும் படங் களோடும் நிறைந்து வழிந்தது. அமெ ரிக்க அதிபரை நேரடியாகச் சந் தித்து நேசக்கரம் கொடுத்த நெதர்லாந்தின் பிரதமர், அவருக்கு வாக்குறுதியளித்த படி நாநூறு இராணுவ வீரர்களை ஈராக்கின் பாக்தாத் நகருக்கு அனுப்புவ தற்கான கட்டளைகள் படைத்துறை யின் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன என்ற செய்தி முன்பக்க பத்திரிகையை நிரப்பியிருந்தது.

பயங்கரவாத ஒழிப்பு என்ற பெய ரால் ஈராக்கும் பலஸ்தீனமும் ஈழதேச மும் நொருங்கிக் கிடக்கின்றன. அடித்து நொருக்கியவர்களும் நொருக்க விரும்பு பவர்களும் அமெரிக்க அரசோடும் அதன் தலைவரோடும் ஆதரவுக்கரம் கொடுக்கிறார்களாம் ஆதாயங்களை யும் ஆதாரங்களையும் தேடிக்கொண்டு.

"மிகவும் நவீன ஆயுத தளபாடங்க ளுடனும் உயர்பாதுகாப்பு வலை செயற் பாடுகளுடனும் இராணுவ வீரர்களுக் கான தனித்த பாதுகாப்பு ஒழுங்குகளு டனும் ஒரு சிறப்புப் படையணிக்குள் நானும் தெரிந்தெடுக்கப்பட்டு ஈராக் போய்க்கொண்டிருக்கிறேன். கவலை யும் மனச்சோர்வும் அடையவேண் டாம். அம்மாவை கவனமாகப் பார்த் துக்கொள்ளுங்கள். ஓர் ஆறு மாதக் கட் டாய சேவைதான். கூடிய கெதியில் உங் களைச் சந்திப்பேன். பின்னர் விபரமா கச் செய்தி அனுப்புகிறேன். சிந்துவுக் கும் மின் அஞ்சல் அனுப்பியுள்ளேன். அம்மாவுக்கு எனது ஆசை முத்தங்கள். அம்மா, அப்பாவைக் கூட்டிக் கொண்டு எங்காவது வெளியில் போங் கள். இதற்காகவும் நீங்கள் இருவரும் சண்டைப்படவேண்டாம். இது எங் கள் கடமை யின் பாற்பட்டது.'' - தமிழ்

தன் முகவரிக்கு அனுப்பப்பட்ட மின் அஞ்சலில் செய்தியை வாசித்து குணம் இடிந்து போனான். இச்செய்தி யால் தேவி என்ன ஆவாள் என்ற தவிப் பும் கவலையும் ஒருபுறமும், பிள்ளையின் பாதுகாப்பு பற்றியதான கேள்விகள் மறுபுறமும் அவனைப் பாடாய்ப்படுத் தின. இப்போது முறிந்து கிடக்கும் உற வில் ஏதாவது புதிய திருப்பங்கள் சேருமா, மேலும் உடைந்து துண்டா டப்படுமா என்றும் ஏங்கவைத் தது.

ஆபத்தும் அடிக்கடி குண்டுவெடிப் பும் நடந்துகொண்டிருக்கின்ற ஈராக் யுத்த களம் மிக ஆபத்தானதல்லவா? குமாரால்கூட தாங்கமுடியாத இச் செய் தியை அந்த அன்பும் பாசமும் மிக்க தாயால் தாங்கிக்கொள்ளமுடியுமா?

"என் அன்பு மகள் சிந்துவுக்கு அண்ணா உனக்கு மின் அஞ்சல் அனுப் பியதாக செய்தி அனுப்பியிருந்தான். அம்மாவுக்கு என்னால் இதுவரை விப ரங்களைச் சொல்லமுடியவில்லை. உடனே நீ வீட்டுக்கு வருவாயா?'' - அப்பா.

மகளுக்கு செய்தியை அனுப்பி விட்டு பெருமூச்சொன்றை ஆழமாக விட்டான்.

திடீரென பிற்பகலில் வவந்திறங்கிய மகளைக் கண்ட சந்தோஷத்தில் சமை யலில் ஈடுபட்டாள் தேவி. உணவை முடித்துக்கொண்டு சிந்துவின் வேண்டு கோளுக்கிணங்க மூவருமாக வெளியே நடந்தனர்.

தெளிந்த நீராக ஓடிக்கொண்டிருந்த மாஸ் ஆற்றங்கரையின் அருகே அமைந்த நடைபாதையில் நடந்து கொண்டே, தாயின் தோளோடு தலை சாய்ந்து சிந்து நடந்தாள். பிள்ளையின் கன்னத்தில் அடிக்கடி முத்தமிட்டாள் தேவி.

பூடகமாக ஈராக் யுத்தம் பற்றியும் அங்கு அமைதி நிலவுவதாகவும் புதிய அரசு அமைக்கப்பட உள்ளதாகவும் தகவல்களைச் சொன்னாள் சிந்து.

நெதர்லாந்திலிருந்து அனுப்பப் பட்ட இராணுவப் பிரிவு பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் விபரித்தாள். அண்ணனின் போர் பிரயாணமும் அவன் ஆபத்தில்லாமல் திரும்புவான் என்ற நம்பிக்கைகளையும் சிந்து மிகத் தைரியமாகவே வலியுறுத்தினாள்.

அருகே இருந்த நடைபாதை இருக் கையில் அமர்ந்துகொண்டு தேவி விக்கி விக்கி அழத்தொடங்கிவிட்டாள். குமார் அவளை அணைத்துக் கொண்டே, "எல்லாம் நல்லாகவே நடக் கும் ஒன்றுக்கும் கவலைப்படாதை யும்'' என்று சொல்லிக்கொண்டே முது கைத் தடவிக்கொண்டிருந்தான். அவ னின் கண்களும் கலங்கியிருந்தன.

"ஒரு யுத்தம் இன்னோர் யுத்தத்துக்கு அடிகோலாமல் சமாதானத்தைக் கொண்டுவரட்டும். மனித வாழ்வு அற் புதமானது. அற்புதங்களைத் தேடிக் கொண்டு அனைவரும் உலகம் முழுவ தும் சண்டைகளில்லாத சமுகமாக வாழவேண்டும். குரோதமும் பகையு ணர்வும் இன்று எல்லா வீட்டு வாசல் களையும் தேடுகின்றன. ஏன்தான் இவையெல்லாம்? இருக்கின்ற காலங் கள் கொஞ்சம்தான். அதற்குள்ளே எதையாவது நல்லவற்றைச் செய்துவிடு வோம்''.

தன் பிள்ளையின் அந்த வார்த்தை கள் அவளை ஆச்சரியப்படவைத்தது. அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

திரும்பி மூவரும் வீட்டுக்கு வந்து தமிழின் செய்திக்காக காத்திருந்தனர். ■

KUMARANS

# Grocers & News Agents

லீலா தயாரிப்பு பொருள்களின்
இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

லீலா

## Money Transfer Service

(Global Exchange Ltd, Western Union)

**KUMARANS**
142-144 Hoe Street
Walthamstow
London E17 4QR

Tel: 020-8521 4955, 020-8521 4411
Fax: 020-8521 9482
Email: kumaransltd@aol.com

# சினிமா



## அரசியல் பிரவேசத்துக்கு காத்திருக்கிறார் விஜய்

முன்னணி தமிழ் நடிகர்களில் ஒருவரான விஜய் அரசியலில் ஈடுபடப்போகிறார் என்று அவருடைய அப்பா எஸ்.ஏ. சந்திரசேகர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவருகிறார். ஆனால், விஜய் அதுபற்றி இதுவரை தெளிவாக எதுவும் கூறவில்லை. எனினும், கடந்த ஜூலை 28 அன்று, புதுக்கோட்டை மாவட்ட விஜய் ரசிகர்கள் மன்றம் சார்பில் இலவச கம்யூட்டர் வழங்கும் விழாவில் பேசிய விஜய் முதல்முறையாக அரசியல்பற்றிப் பேசினார்.

தனது ரசிகர் மன்றங்களை மக்கள் இயக்கமாக மாற்றிய விஜய், இந்த இயக்கத்தில் மேலும் லட்சக்கணக்கானவர்களைச் சேருங்கள் என்று ரசிகர்களைக் கேட்டுக்கொண்டார். மாவட்ட தலைநகரங்களில் ஒரு லட்சம் உறுப்பினர்களையும் ஒன்றிய பகுதிகளில் 50 ஆயிரம் உறுப்பினர்களையும் சேர்க்கவேண்டும். அதை ரசிகர்களாகிய நீங்கள்தான் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் நலன், நாட்டின் வளர்ச்சி போன்றவற்றை மட்டுமே முக்கியமாகக் கருதுவேன். மக்களுக்குத் தலைவனாகவும் தொண்டனாகவும் இருப்பேன் என்றார்.

“திரைத்துறைக்கும் அரசியலுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. கடலில் இறங்கும்போது எப்படி சூழலையும் ஆழத்தையும் அறிந்து இறங்க வேண்டுமோ அதேபோல, அரசியலில் இறங்க எச்சரிக்கையும் நல்ல பக்குவமும் தேவை. நான் ஆலமரமாக இருக்க விரும்புகிறேன். ஏனெனில், எந்தப் புயலுக்கும் ஆலமரம் கீழே சாய்ந்துவிழாது. தற்போது அரசியல் தலைவர்களின் புத்தகங்களைப் படித்துவருகிறேன்'' என்று சொன்ன விஜய், “காலம் கனியும்வரை காத்திருக்கவேண்டும்'' என்றும் சொன்னது ரசிகர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறது.

## விஜயின் பொன்விழா படத்தில் கௌதம்



கௌதம் வாசுதேவ் மேனன். தொழில்நுட்பத் தேர்ச்சி, அழுத்தமான திரைக்கதை, அருமையான இசை ஆகிய அம்சங்களுடன் நேர்த்தியான பொழுதுபோக்கு படங்களை எடுப்பதற்கு பெயர்போனவர். இவர் இதுவரை விஜய், அஜித் இருவரையும் இயக்கியதில்லை. இப்போது இவருக்கு விஜயிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறதாம். அதுவும் விஜயின் 50ஆவது படத்தை இயக்குவதற்காக.

முதலில் பேரரசு, பிறகு எஸ்.பி.ராஜ்குமார் என்றெல்லாம் பெயர்கள் அடிபட்டன. கடைசியில் கௌதம் மேனனுக்கு அழைப்பு போயிருக்கிறது. விஜயின் அழைப்பை ஏற்று கதையை உருவாக்கிக்கொண்டிருக்கிறாராம் கௌதம்.

கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்பு கௌதத்தைச் சந்தித்து கதை கேட்டார் விஜய். அப்போது, தன்னுடைய ஸ்டைலில் கௌதம் சொன்ன கதைக்கு விஜயின் பதில் என்ன தெரியுமா? தந்து திருப்பாச்சி, ஆதி, சிவகாசி போன்ற படங்களின் சி.டிக்களைக் கொடுத்து, இந்தப் படங்களைப்போல மசாலா அயிட்டங்களுடன் கதையை ரெடி பண்ணுங்க என்றாராம். கௌதம் எதுவும் பேசாமல் திரும்பிவிட்டார். இந்தத் தகவலை கௌதமே ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இப்போது, அதே விஜய் இவரை அழைத்திருக்கிறார். மாறியது யார் என்பது விரைவில் தெரிந்துவிடும்.

இதற்கிடையில், அஜித்தின் படத்தை இயக்கும் வாய்ப்புக் கைநழுவிப்போனதில் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறார் கௌதம். எனக்குக் கிடைக்காமல் போனதில் வருத்தம்தான் என்கிறார் கௌதம். “கதையை முழுமை செய்வதற்காக இன்னும் சில மாதங்கள் காத்திருக்கச் சொன்னேன். ஆனால், அவசரப்பட்டு வேறு இயக்குநரைப் பார்த்தார்கள். ஆனால், நான் காத்திருக்கச் சொன்ன அவகாசத்தைத் தாண்டித்தான் அவர்கள் படப்பிடிப்பை தொடங்கினார்கள்'' என்று ஆதங்கப்படுகிறார் கௌதம்.




## முதல்வரின் படமும் வள்ளுவர் கோட்டமும்

கடந்த மாத இறுதியில் சென்னை வள்ளுவர் கோட்டத்துக்குப் போன சுற்றுலாப் பயணிகளும் உள்ளூர்ப் பொதுமக்களும் அதிர்ச்சியடைந்தார்கள். காரணம், கோட்டத்தின் வாசலில் தொங்கும் பூட்டு.

கலைஞரின் நாவலை அடிப்படையாகக் கொண்டு அவரது திரைக்கதையில் உருவாகிவரும் 'பொன்னர் சங்கர்' படப்பிடிப்பு வள்ளுவர் கோட்டத்தில் நடந்துவருகிறது. இதற்காக பிரமாண்டமான செட்டுகளையும், பெரிய குளம் ஒன்றையும் கோட்டத்துக்குள் நிர்மாணித்திருக்கிறார் தயாரிப்பாளரும், இயக்குநருமான தியாகராஜன். படப்பிடிப்புக்கு அனுமதி கொடுத்த அதிகாரிகள், யாரும் உள்ளே வந்துவிட முடியாதபடி, வள்ளுவர் கோட்டத்துக்குப் பூட்டுப் போட்டுவிட்டார்கள்.

உள்ளே படப்பிடிப்பு நடப்பதால், இன்னும் சில தினங்களுக்கு வள்ளுவர் கோட்டம் திறக்கப்படமாட்டாது என்று வெளியே ஒரு போர்டு வைக்க நிர்வாகம் முடிவெடுத்தது. பலர் வந்து போகும் சுற்றுலா மையங்களை இப்படி படப்பிடிப்புக்காகப் பூட்டிவைப்பது சரியா என்பது ஒரு கேள்வி. இதே கோட்டத்தில் மற்றையவர்கள் படத்துக்கும் இதே சலுகை கிடைக்குமா என்பது இன்னொரு கேள்வி.

## குஷ்புவின் கோபம்

தன் கணவர் சுந்தர்சியை வைத்து குஷ்பு தயாரித்த 'ஐந்தாம்படை' படத்துக்கு இணைய தளங்களில் வந்த விமர்சனங்கள் அவருக்கு திருப்திகரமாக இல்லை. இதையடுத்து, தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் (!) செய்தாராம்.


படத்தின் ஸ்டில்களை வாரி வழங்கினோம். நேரம் ஒதுக்கி வீடியோ பேட்டிகள் கொடுத்தோம். ஆனால், ரிலீஸ் நேரத்தில் இப்படி எல்லாரும் காலை வாரிவிட்டார்களே, இதைக் கேட்பாரில்லையா என்று புலம்பினாராம்.

கொஞ்சம் சுமாராகப் படம் எடுத்தாலும் ஊடகங்கள் பாராட்டத்தான் செய்கின்றன. இதே குஷ்பு தயாரித்த 'கிரி', 'வின்னர்' போன்ற மசாலாப் படங்களைப் பொழுதுபோக்கு அம்சங்கள்கொண்ட படங்கள் என்று செய்தி ஊடகங்கள் பாராட்டின. படம் சரியில்லை என்று பட்டால் அதை மறைத்துக்கொண்டு, பொய் சொல்ல வேண்டும் என்கிறாரா குஷ்பு?

இது ஒரு புறம் இருக்க, இந்தப் 'புகாரை' கேட்டுக்கொண்ட சங்கம், சம்பந்தப்பட்ட இணைய தளங்களை அழைத்து காரணம் கேட்கிற முடிவுக்கு வந்திருக்கிறதாம். தேவைப்பட்டால் ஒட்டுமொத்த இணைய தளங்களையும் பத்திரிகையாளர் காட்சிகள், திரைப்பட விழாக்கள் ஆகியவற்றுக்கு அழைக்காமல் புறக்கணிப்பதற்கான வாய்ப்பும் இருப்பதாகச் சொல்கிறார்கள் விவரமறிந்தவர்கள். குஷ்பு, தயாரிப்பாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் என்பது இங்குக் கவனிக்க வேண்டிய செய்தி.

மோசமான படத்தை எடுத்த இயக்குநர் பத்ரியின்மீது அல்லவா குஷ்பு கோபப்பட்டிருக்க வேண்டும்?





## 'உன்னைப்போல் ஒருவன்' தள்ளிப்போகிறது

கமல்ஹாசனின் பொன்விழாப் படம் என்று அறிவிக்கப்பட்ட 'உன்னைப் போல் ஒருவன்' தள்ளிப்போகிறது. கமல் திரை உலகில் பிரவேசித்து 50 ஆண்டுகள் நிறையும்போது (ஆகஸ்ட் 12) இப்படம் வெளியாகும் என்று சொல்லப்பட்டது. ஆனால், படம் தள்ளிப்போய், செப்டம்பர் மாதம் வெளியாகலாமென தெரிகிறது.

1959 ஆகஸ்ட் 12ஆம் தேதி களத்தூர் கண்ணம்மாவில் குழந்தை நட்சத்திரமாக தன் திரையுலக பயணத்தை துவங்கினார் கமல். இதைக் கொண்டாடும் விதத்தில் 'உன்னைப் போல் ஒருவன்' படத்தை அட்டகாசமாக வெளியிட வேண்டும் என கமல் ரசிகர்கள் விரும்பினார்கள். அதை அங்கீகரிப்பதுபோல கமலும், ஆகஸ்ட் 12ம் தேதி படம் ரிலீஸ் என்று கூறிவந்தார்.

ஆனால், இப்போது இந்த திட்டத்தில் மாற்றம். தெலுங்கிலும் இந்தப் படம் நேரடி வெளியீடாக வருகிறது. தமிழில் மோகன்லால் செய்த வேடத்தை தெலுங்கில் வெங்கடேஷ் செய்கிறார். ஆகஸ்ட் 21 முதல் செப்டம்பர் மூன்றாம் வாரம்வரை ரம்ஜான் நோன்பு என்பதால், ஆந்திரா, கேரளாவில் பொதுவாக புதுப் படங்கள் பெரிய அளவில் வெளியாகாது. நோன்பு காலத்தில் வசூல் பாதிக்கும் என்பதால், அது முடிந்த பிறகு படத்தை வெளியிட்டால் வசூல் பாதிக்காது என்று மோகன்லாலும் வெங்கடேஷும் கமலிடம் கூறினார்களாம். இதைக் கமல் ஒப்புக்கொண்டிருப்பதாக தெரிகிறது.

## ரஹ்மான் ஏன் வரவில்லை?




அண்டை மாநிலங்களில் நடைபெறும் பாராட்டு விழாக்களில் கலந்துகொள்ளும் ஏ.ஆர். ரஹ்மானுக்கு தமிழ் திரையுலகம் ஒரு பாராட்டு விழாவும் நடத்தவில்லை என்ற ஏக்கம் அவர் ரசிகர்களுக்கு இருக்கிறது. ஆனால், நாங்கள் அழைத்தோம், அவர்தான் வரவில்லை என்கிறார் நடிகர் சங்கச் செயலாளர் ராதா ரவி.

ரஹ்மான் ஒஸ்கார் விருது வாங்கியதும், அவருக்குப் பாராட்டு விழா நடத்தவேண்டும் என்று முதலில் விரும்பியது நடிகர் சங்கம்தானாம். தயாரிப்பாளர் சங்கத்தோடு இணைந்து இந்தப் பாராட்டு விழாவை நடத்தலாம் என்பது அவரது எண்ணம். இதற்காக முறைப்படி ரஹ்மானிடம் தேதியும் ஒதுக்கித்தரும்படி கேட்டாராம். ஆனால், இன்றுவரை ரஹ்மானிடமிருந்து பதிலே இல்லையாம்.

"பக்கத்து மாநிலங்களில் நடைபெறும் விழாக்களில்கூட கலந்துகொள்கிறார். ஆனால், நாங்கள் அழைத்தால்மட்டும் பதிலே சொல்ல மறுக்கிறார். இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்றார் ராதா ரவி.

(தொகுப்பு: சென்னைத் திரைவாசல்)



## மோதி விளையாடு

**இயக்கம்: சரண்**
**நடிப்பு: விநய், காஜல் அகர்வால், கலாபவன் மணி, யுவா, சந்தானம், ஹனீபா, மயில்சாமி**
**இசை: ஹரிஹரன், லெஸ்லி**

கோடீஸ்வரர் ராஜன் வாசுதேவ் (கலாபவன் மணி) தொழில் எதிரிகளிடமிருந்து மகன் உதய் வாசுதேவை (விநய்) காப்பாற்ற பலத்த ஏற்பாடுகளைச் செய்கிறார். அனாதை இல்லத்திலிருந்து எடுத்துவந்த 'கடவுளின் குழந்தை' மதன் (யுவா) உதயின் கூடவே இருக்கிறான்.

விஸ்காம் மாணவி எல்.ஆர். ஈஸ்வரி (காஜல் அகர்வால்) செய்யும் ஒரு தவறினால் உதயின் கார் பழுதாகிறது. அவன் மீது காதல்வயப்படும் உதய், தன் வீட்டில் வேலைசெய்து இந்த நஷ்டத்தை சரிக்கட்டும்படி நிர்ப்பந்திக்கிறான். மதனும் ஈஸ்வரியை விரும்புகிறான்.

ஈஸ்வரி யாரை விரும்புகிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள உதய் முனையும்போது உதய்க்கு குறிவைக்கும் கொலையாளியின் தோட்டா மதன் உயிரை வாங்கிவிடுகிறது. பிறகு உதயின் வாழ்க்கையில் அதிர்ச்சிகரமான மாற்றங்கள். அதிலிருந்து அவன் எப்படி மீள்கிறான் என்பது மீதிக் கதை.

கதையின் முக்கிய திருப்பம் வருவதற்குள் பாதிப் படம் சிறுபிள்ளைத்தனமாய்க் கழிந்துவிடுகிறது. அடையாளச் சிக்கலோடு, உயிர் பிழைத்திருப்பதற்காகப் போராடவேண்டிய நிலையில் உள்ள உதயின் போராட்டத்தை துடிப்போடு சொல்வதில் திரைக்கதை தோற்கிறது. படம் அவசர கோலத்தில் அள்ளித் தெளித்த கதையாக நிற்கிறது.

கருணின் ஒளிப்பதிவு, ஹரிஹரன் - லெஸ்லியின் இசை, காஜல் அகர்வாலின் அழகு, நடிப்பு ஆகியவை மட்டுமே படத்துக்குப் பலம்.



## அச்சமுண்டு அச்சமுண்டு

**இயக்கம்: அருண் வைத்தியநாதன்**
**நடிப்பு: பிரசன்னா, சிநேகா, ஜான் செஹா**
**இசை: கார்த்திக் ராஜா**

அமெரிக்காவாழ் இந்தியர் அருண் வைத்தியநாதனும் அமெரிக்கர் ஜான் செஹாவும் இணைந்து தயாரித்திருக்கும் இப்படம் குழந்தைகள்மீதான பாலியல் பலாத்காரத்தை மையமாகக் கொண்ட த்ரில்லர். அதாவது, அப்படிச் சொல்ல இயக்குநர் விரும்புகிறார்.

நியூ ஜெர்சியில் வசிக்கும் தமிழர்களான செந்தில் (பிரசன்னா), மாலினி (சிநேகா) தம்பதியின் அமைதியான குடும்பத்தில் சந்தடியில்லாமல் நுழையும் அபாயத்தை படம் நன்றாகக் காட்டுகிறது. வீட்டுக்கு வண்ணம்பூசவரும் ராபின்சன் (ஜான் செஹா) சிறுவர், சிறுமிகளைப் பாலியல் பலாத்காரம் செய்யும் சைக்கோ என்பது தெரியாமல் அவனை வீட்டுக்குள் அனுமதிக்கிறார்கள். இவர்களது குழந்தை ரித்திகாவை அவன் குறிவைக்கிறான். இவனிடமிருந்து குழந்தையை எப்படிக் காப்பாற்றுகிறார்கள் என்பதே மீதிக் கதை.

வெளிநாடு வாழ் இந்திய தம்பதிகளைப் பிரசன்னாவும், சிநேகாவும் கச்சிதமாகப் பிரதிபலிக்கிறார்கள். அமெரிக்கரான, ஜான் செஹா இயல்பாக நடித்திருக்கிறார். கார்த்திக் ராஜாவின் இசையில் பாடல்கள் இனிமை. மார்ட்டியோவின் பின்னணி இசை அருமை.

காத்திரமான விஷயத்தை எடுத்துக் கொண்டதற்காகவும் பாலியல் துன்புறுத்தலைச் சாக்காக வைத்து வக்கிரமான காட்சிகளைப் புகுத்தாமல் இருந்ததற்காகவும் அருணைப் பாராட்டலாம். காட்சிகளை உருவகிப்பதிலும் திரையில் வடிப்பதிலும் நேர்த்தியாகவே செயல்பட்டிருக்கிறார். ஆனால், குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் என்னும் விஷயத்தை மேலோட்டமாகக் கையாள்கிறார். படம் அமெரிக்கா வாழ் இந்திய தம்பதி பற்றிப் பேசுகிறதா, குழந்தைகளுக்கான அபாயம் பற்றிப் பேசுகிறதா என்னும் கேள்வி எழுகிறது.



## வண்ணத்துப்பூச்சி

இயக்கம்: ராசி அழகப்பன்
நடிப்பு: பாலா சிங், திவ்ய பாரதி, சித்தார்த், மாதவி ஷர்மா
இசை: ரேஹான்

நகரத்தில் வேலைபார்க்கும் அருண் (சித்தார்த்), சித்ரா (மாதவி ஷர்மா), அவர்களின் குழந்தை திவ்ய பாரதி (ஸ்ரீலட்சுமி), கிராமத்தில் தனித்து வசிக்கும் தாத்தா ( பாலா சிங்), கிராமத்துக் குழந்தைகள் ஆகியோரைச் சுற்றி பின்னப்பட்டுள்ள இப்படம், நகர-கிராம வாழ்க்கைகளின் பின்னணியில் குழந்தை வளர்ப்புப்பற்றி போதிக்கிறது. தன் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத பெற்றோர்மீது குழந்தை வழக்கு தொடுப்பதாக சித்தரித்து, தனது போதனைகளின் எல்லைகளை விஸ்தரிக்கிறது.

வசதி, வாய்ப்பைவிடவும், அன்பும் அரவணைப்பும்தான் குழந்தைகளுக்குத் தேவை என்று சொல்லவரும் இயக்குநர், அதை இயல்பான காட்சிகள் மூலம் சொல்லத் தவறுகிறார். இந்தக் காலத்து பணக்கார இளம் பெற்றோர் குறித்து அவர் தரும் சித்திரம் யதார்த்தத்துக்குப் பொருந்தாதது. இப்போதெல்லாம் படித்த, பணம்படைத்த பெற்றோர்கள், தமது குழந்தைகளின் படிப்பு, பள்ளி விழாக்கள், பிறந்தநாள் விழாக்கள் முதலான பல விஷயங்களில் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். தவிர, கிராமங்களின் அன்பு, அழகு பற்றி அழகப்பன் தரும் சித்திரம் இன்னோர் அலுப்பூட்டும் பொய்.

ஸ்ரீலட்சுமி நன்றாக நடிக்கிறாள். ஆனால், அவளை வயதுக்குமீறி பேச வைப்பது எரிச்சலூட்டுகிறது. பாலா சிங் பரவாயில்லை. சித்தார்த்தும் மாதவியும் பலவீனமான பாத்திர வார்ப்பில் தடுமாறுகிறார்கள்.

குழந்தைகளைக் கவனியுங்கள் என்று சொல்லவந்த படம், அணுகுமுறையில் உள்ள பிரச்னையால் குழந்தைகளுக்கான படமாக இல்லாமல், குழந்தைத்தனமாக படமாக சறுக்கியிருக்கிறது.



## சிந்தனை செய்

இயக்கம்: யுவன்
நடிப்பு: யுவன், சஷாந், பாலா, மதுப்ரியா, காதல் தண்டபாணி
இசை: தமன்

இயலாமையின் விளைவான அவமானத்தின் வலி ஒருவனை எந்த அளவுக்கு கொண்டுபோகும் என்பதை மையமாகக்கொண்ட படம் 'சிந்தனை செய்'. புதுமுக இயக்குநர் யுவன், கதை திரைக்கதை எழுதியதுடன், முக்கிய பாத்திரத்தில் நடிக்கவும் செய்திருக்கிறார்.

காதல், காமம் உள்ளிட்ட பல விஷயங்களிலும் ஆதி (யுவன்) அடையும் தோல்விகள்தான் அவனை உந்தித் தள்ளும் சக்தி. பள்ளியில் தன்னைப்போலவே சுமாராக படித்த சக மாணவர்கள் சிலரைச் சந்திக்க, அவர்களும் வாழ்வில் தடுமாறிக்கொண்டிருப்பது தெரிகிறது. இவர்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்து சிறுசிறு குற்றங்கள் புரிகிறார்கள். பின்னர் ஒரு வங்கியைக் கொள்ளையடிக்கிறார்கள். கிடைக்கும் ஐந்து கோடிகளைப் பங்குபோட்டுக்கொள்வதில் எழும் மோதல் கொலைகளுக்கு வழிவகுக்கிறது. ஆதி தன் அடையாளத்தை வன்முறையின்மூலம் நிலைநாட்டிக்கொண்டானா என்பதே மீதிக் கதை.

புதிய பாதையில் ஒரு கதையைச் சிந்தித்ததுடன் அதைப் பெருமளவுக்கு விறுவிறுப்பான திரைக்கதையின் மூலம் சொல்லியிருக்கிறார் யுவன். உளவியல் என்றாலே 'சைக்கோ' என்று கொச்சையாகப் புரிந்துவைத்திருக்கும் தமிழ் சினிமாவில், உளவியல் நெருக்கடிகள்கொண்ட நாயகனை இயல்பான மனிதனாகக் காட்டியிருப்பதும் ஆறுதல் அளிக்கிறது.

பல காட்சிகள் கச்சாத் தன்மை கொண்டிருக்கின்றன. திரைக்கதையிலும் பல இடைவெளிகள். ஐந்து கோடி பணத்தை உடனே பங்குபோட்டுக் கொண்டு போகாமல், ஒளித்து வைப்பது என்னும் ஆபத்தான முடிவை ஏன் எடுத்தார்கள் என்ற கேள்விக்கு பதில் இல்லை. இப்படிப் பல குறைகள் இருந்தாலும் அச்சுப்பிச்சுத்தனங்களும் நம்ப முடியாத சண்டைகளும் எரிச்சலூட்டும் ஹீரோயிசமும் இல்லாமல் படம் எடுத்ததற்காக பாராட்டலாம்.

தமிழில் அரிதாகவரும் வித்தியாசமான படங்களில் ஒன்று.

\- அரவிந்தன்


நம்ப முடியாத விலையில்
முதல்தர வைர ஆபரணங்கள்
ஸ்ரீ ஐஸ்வர்யா சேலைகளின்
ஹன்சிகா தெரிவுகள்!
பட்டுச் சேலைகள்
Exclusive Embroidery சேலைகள்
முதலாம் ஆண்டு நிறைவு மலிவு விற்பனை
பட்டுச் சேலை,
வைர ஆபரண சீட்டுக்கள்
மாதம் £30 செலுத்தி
6 மாதங்களில்
£200 பெறுமதியான
பட்டுச் சேலை
மாதம் £100 செலுத்தி 18 மாதங்களில்
£2000 பெறுமதியான வைர ஆபரணம்
WHITE FIRE
63 Victoria Road
Ruislip
Middx. HA4 9BH
Tel: 01895 636462
Fax: 01895 634422
Mobile: 07780 975142




RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

**Canada - Toronto வுக்கு** **Real Estate Service**

**அண்மித்த பகுதியில்......**


**வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....**


# Karu Kandiah FRI. CRES,

Real Estate Broker / President

* 20 Years Real Estate Experience
* Multi Award Winner

**Dir: 416-284-5698**
**Bus: 416-284-5555**
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6




Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909